Follow us:

தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 31 சுபகிருது வருடம், ஆடி மாதம் 18ஆம் திகதி புதன்கிழமை
(03.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 04 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

நிமல் சிறிபால டி சில்வா மீண்டும் அமைச்சரானார்

ஊழல் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிப்பு

02 பக்கம்

எனது தொலைபேசி 24 மணிநேரமும் ஒட்டுக்கேட்கப்படுகிறது

டலஸ் அழகப்பெரும எம்.பி.

"நாட்டில் ஒரு பெரிய மாற்றம் நிகழும் என்று இந்த மக்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருந்தனர். அந்த நம்பிக்கைக்கு உயிர் கொடுக்க வேண்டியது நம் எல்லோருடைய கடமை" - என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தொண 360 நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

02 பக்கம்

வங்கிகள் ஊடாக டொலர்கள் வந்தால் தீர்வை வரிச்சலுகை கொடுப்பனவு உயரும்

வெளிநாடு வாழ் இலங்கையர்களுக்கு அரசு விசேட அறிவிப்பு

யோ.தர்மராஜ்

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் வங்கிகளின் ஊடாக நாட்டுக்கு டொலர்களை அனுப்பினால், அவர்கள் நாட்டுக்கு வரும்போது விமான நிலையத்தில் வழங்கப்படும் தீர்வை வரிச்சலுகை கொடுப்பனவு அதிகரிக்கப்படும் என்பதோடு, நாட்டுக்கு அனுப்பியுள்ள டொலரின் பெறுமதிக்கமைய இலத்திரனியல் வாகனத்தை இறக்குமதி செய்வதற்கும் அனுமதி வழங்கப்படும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

02 பக்கம்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்றுக் காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படம்:- யாழ்.செய்தியாளர்)

நாணய நிதியத்தின் உதவியால் நாடுகள் பல சீரழிந்துள்ளன

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கப்ரால் தெரிவிப்பு

யோ.தர்மராஜ்

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகுமென்று நம்புவது ஒரு மாயையெனத் தெரிவித்துள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அழித் நிவார்ட் கப்ரால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஆதரவுகளைப் பெற்றுக்கொண்ட பல நாடுகள் சீரழிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

சீரற்ற காலநிலை; பெரும் பாதிப்பு!

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்வு

யோ.தர்மராஜ்

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால் இன்றும் பல மாவட்டங்களில் மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளதாக மண்சரிவு எச்சரிக்கை இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் 7 மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 911 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 821 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். மூவர் உயிரிழந்துள்ளதுடன், நால்வர் காணாமல்போயுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 330 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 222 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காணாமல்போயுள்ளனர்.

02 பக்கம்

நாட்டின் நிலைமை குறித்து விளக்கம்; கொழும்பில் இராஜதந்திரிகளுடன் அமைச்சர் அலிசப்ரி சந்திப்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இராஜதந்திரிகளுக்கான முதலாவது மாநாட்டில் புதிய ஜனாதிபதியின் தொடர்ந்து ஏற்பட்ட முக்கிய அபிவிருத்திகள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, கொழும்பிலுள்ள தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு விளக்க மளித்தார்.

02 பக்கம்

22ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் நிறைவேற்றதிகாரத்தை நீக்கமுடியாது

விஜேதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

யோ.தர்மராஜ்

நாட்டின் தற்போதைய அரசியலமைப்பின் பிரதான நோக்கம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை எள்பதால், அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தில் நிறைவேற்றதிகார...

02பக்கம்

நாட்டுக்குத் தேவையான நிதியை இலங்கை மத்திய வங்கி திரட்டும்

அமைச்சரவையில் ஆளுநர் உறுதியளித்ததாக கூறுகிறார் அமைச்சர் மனுஷ

யோ.தர்மராஜ்

வருட இறுதிவரையான காலப்பகுதிக்கு தேவையான எரிபொருள், நிலக்கரி, மருந்துகள் மற்றும் உர இறக்குமதிக்கு தேவையான நிதியை திரட்டுவதற்கு மத்திய...

02 பக்கம்

இங்கிலாந்து சென்ற இரு இலங்கையர்கள் மாயம்

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்காக சென்ற இருவரென தகவல்

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் 22ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஐந்தாம் நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்ற பின்னர் இலங்கை தடகள வீரரும் ஓர் உயர் அதிகாரியும் காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் காணாமல்போனது குறித்து இலங்கை அணி நிர்வாகம் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் அளித்துள்ளதுடன், பேர்மிங்காம் நகர பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்காக அனைத்து இலங்கை விளையாட்டு வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் 180 நாள் விசா வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உஷ்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்குமிடையில் இன்று சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்ரமசிங்க தெரிவுசெய்யப்பட்ட பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மேற்கொள்ளும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

மாலை 4 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது. சர்வகட்சி அரசில் அமைச்சுப் பதவிகளை ஏற்குமாறு ஜனாதிபதி ரணில் இன்று கூட்டமைப்பிடம் கேட்கவுள்ளாராம்.

அரச பணியாளர்களுக்கான வெள்ளிக்கிழமை லீவு இரத்து

யோ.தர்மராஜ்

"அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வெள்ளிக்கிழமை விடுமுறை இரத்துசெய்யப் பட்டுள்ளதால், எதிர்வரும் வாரத்திலிருந்து அரச நிறுவனங்கள் வெள்ளிக்கிழமையில் இயங்கும்" என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

02 பக்கம்

எரிபொருள் தேவைக்காகவே சீனக் கப்பல் வருகையாம்!

சொல்கிறார் அமைச்சர் பந்துல

யோ.தர்மராஜ்

எரிபொருள் மற்றும் ஏனைய தேவையை பூர்த்திசெய்துகொள்ளவே சீனக்கப்பல் இலங்கை வருகிறது. மாறாக, நாட்டினுள் வேறெந்த செயற்பாடும் முன்னெடுக்கப்படாது. இது குறித்து இராஜதந்திர மட்டத்தில் ஏனைய நாடுகளுக்கு விளக்கமளிக்கப்படும் என அமைச்சரவையில் ஜனாதிபதி கூறியதாக அமைச்சரவை...

02 பக்கம்

அதிகாரிகள் குற்றமிழைத்தால் பதவி நீக்கப்படுவார்கள்

வடக்கு ஆளுநர் அதிரடி அறிவிப்பு

"வடக்கு அரச அதிகாரிகள் மீது ஒழுக்காற்று விசாரணையின்போது குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை அல்லது பதவி நீக்கம் செய்யப்படுமே அல்லாமல் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது" என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..

உண்மை சொல்லப்போனால் 10 ரூபா விலைக்குறைப்பு கூட பெரியதொரு விலைக்குறைப்புதான் பாருங்கோ...

அரச பணியாளர்களுக்கான...

தகவல் திணைக்களத்தில் நேற்று (02) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் தினேஷ் குணவர்தன உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்தபோது, நாட்டில் காணப்பட்ட போக்குவரத்து நெருக்கடிகள் உள்ளிட்ட ஏனைய நெருக்கடிகள் காரணமாக 2022.06.15ஆம் திகதிமுதல் வெள்ளிக்கிழமையை அரச நிறுவனங்களில் விடுமுறை தினமாக அறிவித்தார். எனினும், தற்போது கட்டம் கட்டமாக நெருக்கடிகள் குறைவடைவதோடு, பொது போக்குவரத்துகளும் வழமைக்குத் திரும்புவதால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த வெள்ளிக்கிழமை விடுமுறை தினத்தை உடனடியாக நீக்குவதற்கு பிரதமர் அமைச்சரவைக்கு யோசனையொன்றை முன்வைத்தார். அதன்படி, எதிர்வரும் வாரத்திலிருந்து அரச நிறுவனங்கள் வெள்ளிக்கிழமை இயங்கும் தினமாக மாறும் - என்றார்.

நிமல் சிறிபால டி சில்வா...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிரான இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி குழுவின் அறிக்கையில், அவர் மீதான குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக தெரிவித்ததையடுத்து அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜப்பானிய தாய்சே நிறுவனத்திடம் அமைச்சர் ஒருவர் இலஞ்சம் கோரியுள்ளதாக அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்திருந்தார்.

ஜப்பானின் தாய்சே நிறுவனத்திடம் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் இலஞ்சம் கோரியதாக சமூக, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியான செய்தியின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயத்தை எழுப்பினார்.

நிமல் சிறிபால டி சில்வாவின் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், இந்த விவகாரம் தமக்கு உட்பட்ட அமைச்சின்கீழ் வருவதனால் விசாரணை நடத்தப்படவேண்டுமெனக் கோரி, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பதவியிலிருந்து அவர் தற்காலிகமாக இராஜினாமா செய்தார்.

அதன்பின்னர், ஜூலை 22ஆம் திகதி, முன்னாள் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்த மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

விசாரணைக் குழு அறிக்கை ஜூலை 31ஆம் திகதி ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கையில், முன்னாள் அமைச்சர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் அவர் குற்றமற்றவர் என குழு உறுப்பினர்கள் கண்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குத் தேவையான...

வங்கியால் முடியும் என மத்திய வங்கி ஆளுநர் அமைச்சரவைக்கு தெரிவித்ததாக அமைச்சவை இணைப் பேச்சாளர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று (02) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் QR முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் எரிபொருள் வரிசைகள் குறைந்துள்ளன. இந்நிலையில், ஓகஸ்ட் மாத இறுதிவரை தேவையான எரிபொருள் கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், அதனை பெற்றுக்கொள்ளத் தேவையான நிதியை செலுத்த வேண்டியுள்ளது.

வருட இறுதிவரை தேவையான எரிவாயு கணக்கிடப்பட்டு, அதற்குத் தேவையான நிதியையும் உலக வங்கி செலுத்துவதற்கு முன்வந்துள்ளது. எரிபொருள் மற்றும் நிலக்கரி இறக்குமதிக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு குறித்து மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துவருகின்றது. அதன்படி, வருட இறுதி வரையான காலப்பகுதிக்குத் தேவையான எரிபொருள், நிலக்கரி, மருந்துகள் மற்றும் உர இறக்குமதிக்குத் தேவையான நிதியை திரட்டுவதற்கு மத்திய வங்கிக்கு முடியும் என மத்திய வங்கி ஆளுநரினால் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை விட ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி குறைவு என்பதால், பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளதால் ஏற்றுமதியாளர்களின் ஊடாக நிதியை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முடியும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் அமைச்சரவைக்கு சுட்டிக்காட்டினார் - என்றார்.

அதிகாரிகள் குற்றமிழைத்தால்...

நேற்று செவ்வாய்க்கிழமை அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

வடமாகாணத்தில் கடமையாற்றும் அரச அதிகாரிகள் மீது யாராவது ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுகள் முன்வைத்தால் ஆளுநர் என்ற ரீதியில் ஒழுக்கற்று விசாரணை மேற்கொள்ளப் படும். விசாரணை ஒன்றில் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட மாட்டாது. தண்டனை அல்லது சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் சேவையின் நிமித்தம் இடமாற்றத்திற்கு உரித்துடையவர்கள். அவர்களின் இடமாற்றம் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் விசேட சேவை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும்.

மாகாண இடமாற்றங்கள், நியமனங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுமே அல்லாமல் ஒழுக்காற்று விசாரணையால் இடமாற்றங்கள் மேற்கொள்ளப் படாது. ஆளுநரால் மேற்கொள்ளப்படும் அதி விசேட சிறப்பு தர அதிகாரிகளின் நியமனத்தை ஆளுநரால் திரும்பப் பெற முடியும் - என்றுள்ளது.

எனது தொலைபேசி...

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், நாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமைக்கு பின் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

எனது தொலைபேசி 24 மணிநேரமும் ஒட்டு கேட்கப்படுகிறது. இதற்கு யார் உத்தரவிட்டார்கள் என்பதை இனிவரும் காலங்களில் வெளிப்படுத்துவேன்.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் இருந்து என்ன நடக்கிறது என்பது நாட்டிலுள்ள அனைவருக்கும் தெரியும்.

சர்வதேச நாணய நிதியத்தால் கூட அந்த பெரிய செயல்பாடுகளை கையாள முடியும் என்று நான் நினைக்கவில்லை. இதை வரலாறு பதிவு செய்யும். நீதி இல்லாத நாட்டிற்கு எதிர்காலம் இல்லை. இந்த நிலையை ஏற்படுத்தியவர்கள் மக்கள் அல்ல. அரசியல்வாதிகளே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தேவைக்காகவே...

பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று (02) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிடம் அனுமதி பெற்று சீனாவிலிருந்து வருகை தரவுள்ள சீன இராணுவக் கப்பலானது, எரிபொருள் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கே வருகை தருகின்றன. மாறாக, நாட்டினுள் வேறு எந்தவொரு செயற்பாட்டையும் முன்னெடுப்பதற்கு இங்கு வரவில்லையென வெளிவிவகார அமைச்சர் அமைச்சரவைக்கு தெளிவூட்டினார்.

இந்தியா, சீனா உள்ளிட்ட ஏனைய நாடுகளும் எங்களுக்கு மிக நெருக்கமான நாடுகளாகும். இந்த நாடுகள் அனைத்தும் நெருக்கடிகளின் போது எங்களுக்கு பாரிய உதவிகளை வழங்கும் நாடுகளாகும். எனவே, இந்த நாடுகளுக்கிடையிலான நட்புறவில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாதவாறு இராஜதந்திர மட்டத்தில் கருத்துகளை தெளிவூட்டுவதாக ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்தார் - என்றார்.

நாணய நிதியத்தின்...

நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுப்பதற்கு பாதமான தீர்மானங்களை எடுத்து பொறுப்பாளர்களுக்கு எதிராக முறையான விசாரணைகளை முன்னெடுத்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்றுமுன்தினம் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான நீதிபதிகள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வழக்கின் 7ஆவது பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முன்வைத்த 37 பக்கங்களைக் கொண்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை பெறுவதற்கு, வரி அதிகரிப்பு, மக்களுக்கு வழங்கும் சலுகைகளுக்காக ஒதுக்கப்படும் நிதிகளை குறைத்தல் அல்லது முழுமையாக இரத்துசெய்தல், ஓய்வூதியத்தை இரத்துசெய்தல் போன்று பொதுமக்களை பாதிப்புக்குள் தள்ளும் மோசமான நிபந்தனைளுக்கு அரசாங்கம் பணிய வேண்டியிருக்கும் எனவும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர், பிரதம நீதியரசர் தலைமையிலான ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக தான் பொறுப்பேற்றது தொடக்கம், மத்திய வங்கியின் பொறுப்பை சட்டத்திற்கு உட்பட்டு நிறைவேற்றும் நோக்கத்துடன் மத்திய வங்கியின் முதன்மை கடமைகளை நிறைவேற்றும் முகமாகவே செயற்பட்டுள்ளேன் என்பதற்கமைய வழங்குதாரரின் அடிப்படை உரிமை மீறப்படவில்லை எனவும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார். 2022 ஜனவரி மாதம் வரை கடனை மீள செலுத்துவதே அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தமையினால், 2022 ஜனவரி 18ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி 500 மில்லியன் டொலர்களை கடனாக செலுத்தியுள்ளது. கடனை செலுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பே தவிர, அரசாங்கத்தின் முகவராக செயற்படும் மத்திய வங்கி ஆளுநரின பொறுப்பல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசு தொடர்பில் இவ்வாரத்திற்குள் முடிவெடுங்கள்

ஆளுங்கட்சி எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

யோ.தர்மராஜ்

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பாக இவ்வாரத்தில் பல கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு, இறுதி முடிவெடுக்கப்படவேண்டும். இல்லையேல், ஆளுந்தரப்புடன் இருக்கும் கட்சிகளுடன் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என ஆளுந்தரப்பிலுள்ள கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று மாலை இடம்பெற்ற ஆளுந்தரப்பிலுள்ள கட்சித் தலைவர்கள் குழுக்கூட்டத்திலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளதாக முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் ஸ்திரமானதொரு அரசாங்கம் இல்லை என்பதால், சர்வதேச ரீதியில் கிடைக்கும் ஆதரவுகள் தாமதமாகலாம். அத்தோடு, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளும் பிற்போடப்படலாம். எனவே, விரைவில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கவேண்டும் என கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது விளக்கமளித்துள்ள ஜனாதிபதி, அனைத்து கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளேன். அதன்படி, இவ்வாரம் 4ஆம், 5ஆம் திகதிகளில் பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கூறியுள்ளனர்.

நாட்டின் நிலைமை குறித்து...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தெரிவு செய்வதற்கும் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கும் இட்டுச்சென்ற இலங்கையின் அண்மைக்கால அரசியல் நிகழ்வுகளை அமைச்சர் சுட்டிக்காட்டினார். இது தொடர்பான செயன்முறைகள் ஜனநாயக அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள் இடம்பெற்றன.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை சர்வதேச சமூகத்திலுள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் மிக அதிக முன்னுரிமையுடன் கலந்துரையாடி விரைவாகத் தீர்ப்பதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார். தற்போதைய சமூகப் பொருளாதார சூழலில் பொருத்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் உதவிகளுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சர்வதேச சமூகத்திற்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

தற்போதைய சவால்களை எதிர்கொள்வதில் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படும் பரந்த அடிப்படையிலான கலந்தாலோசனை அணுகுமுறையை விரிவாகக் குறிப்பிட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக நடைபெற்றுவரும் கலந்துரையாடல்கள் குறித்து குறிப்பிட்டார். மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப முற்போக்கான சட்டசீர்த்திருத்தங்கள் விரைவில் மேற்கொள்ளப்படுவது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2022 ஓகஸ்ட் 03ஆம் திகதி, இன்று புதன்கிழமையன்று நாடாளுமன்றம் அதன் அடுத்த அமர்வுக்காக மீண்டும் கூடும்போது ஜனாதிபதி விக்ரமசிங்கவினால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் புதிய அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமைகள் தொடர்பாக அனைவருக்கும் நட்பு என்ற கொள்கையின் அடிப்படையில் இலங்கையின் நடுநிலை மற்றும் அணிசேரா வெளியுறவுக் கொள்கையை அமைச்சர் சப்ரி மீண்டும் வலியுறுத்தினார்.

அமைதியான போராட்டத்திற்கான உரிமை, ஒன்றுகூடும் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட இலங்கையின் நீண்டகால ஜனநாயக நற்சான்றிதழ்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எடுத்துரைத்தார். இந்த உரிமைகள் அரசியலமைப்பு ரீதியில் அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கம் திறம்பட செயற்படுவதை உறுதி செய்வதற்காக சட்டத்தின் கட்டமைப்பிற்குள் நாட்டில் இயல்பு நிலையை மீட்டெடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவர் இராஜதந்திர சமூகத்திற்கு விளக்கினார். ஜூலை 2022இல் இயற்றப்பட்ட அவசரகால சட்டங்கள் வழக்கமான மற்றும் அவ்வப்போது மீளாய்வுக்கு உட்பட்டவை என்பதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

22ஆவது அரசியலமைப்பு...

ஜனாதிபதி முறைமையை முற்றாக நீக்க முடியாது. அது புதிய அரசியலமைப்பு திருத்தத்திலேயே முன்னெடுக்கப்பட வேண்டும் - என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள 22ஆவது திருத்தம் 19ஆவது திருத்தத்தை பலப்படுத்துவதை தாண்டி, 20ஆவது திருத்தத்திலுள்ள நல்ல விடயங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் இது 19ஆவது திருத்தம் என யாராலும் கூற முடியாது எனவும் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று (02) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவையில் 22ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இன்று (நேற்று) அதனை வர்த்தமானியில் வெளியிடுவதுடன், 7 நாட்கள் கடந்த பின்னர், முதல் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

நாட்டில் இறுதியாக 20ஆவது திருத்தமே நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனையடுத்து, எதிர்க்கட்சியினால் 21ஆவது திருத்தம் தனிநபர் யோசனையாக முன்வைக்கப்பட்டது. இதனையடுத்தே, நான் 22ஆவது திருத்தத்தை தனிநபர் யோசனையாக முன்வைத்தேன். பின்னர், நான் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டதன் பின்னர், தனிநபர் யோசனையாக முன்வைத்த 22ஆவது திருத்ததை விலக்கிக்கொண்டு, அரசாங்கத்தினால் 22ஆவது அரசியலமைப்பு திருத்தம் முன்வைக்கப்பட்டது. எனினும், நாடாளுமன்றத்தில் இந்த 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் குறித்த திருத்தம் 21ஆவது திருத்தம் என பெயரிடப்படும்.

இந்நிலையில், 22ஆவது திருத்தம் தொடர்பாக சமூகத்தில் பாரிய எதிர்பார்ப்புகள் எழுந்த நிலையில், அரசியல் கட்சிகள், சிவில் கட்சிகள் உள்ளிட்ட 100 கட்சிகளுக்கு மேலான கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியே நாங்கள் இந்த திருத்தத்தை முன்வைத்துள்ளோம்.

குறிப்பாக, 20ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு, 19ஆவது திருத்தத்திற்கு ஒப்பான வகையிலேயே 22ஆவது திருத்தம் நிறைவேறறப்பட வேண்டும் என பலரும் சுட்டிக்காட்டினர். அதன்படி, நாங்கள் 19ஆவது திருத்தத்திலுள்ள குறைபாடுகளை நீக்கிவிட்டு, 20ஆவது திருத்தத்திலுள்ள சிறந்த விடயங்களையும் உள்ளடக்கியே 22ஆவது திருத்தத்தை முன்வைத்துள்ளோம். அதன்படி, 22ஆவது திருத்தம் 19ஆவது திருத்தம் என யாராலும் குறிப்பிட முடியாது.

அதற்கமைய, ஆவது திருத்தத்திற்கு அமைய தேசிய அரசியலமைப்பு பேரவைக்கு மூன்று உறுப்பினர்களை தெரிவு செய்யும் போது, அந்தந்த கட்சிகளின் உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு பிரதமர் மற்றும் எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட்டிருந்து அதிகாரம் நீக்கப்பட்டு, சபாநாயரின் தலையீட்டுடன், அக்கட்சிகளின் உறுப்பினர்களினாலேயே தெரிவு செய்ய முடியும். அதன்படி, உறுப்பினர்களை தெரிவு செய்யும் போது பிரதமர் மற்று எதிர்க்கட்சித் தலைவர்கள் இணக்கமில்லாத போது, ஏற்படும் பிரச்சினை புதிய முறையின்படி ஏற்பட வாய்ப்பில்லை.

அதேபோன்று, ஜனாதிபதியினால் மத்திய வங்கி ஆளுநரை நியமிக்கும் போது, அரசியலமைப்பு பேரவையின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி பொறுப்புக்கூற வேண்டும் என்பதால், ஜனாதிபதியினால் பாதுகாப்பு அமைச்சை வகிக்க வேண்டும் என 22 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பிலுள்ள திருத்தங்களை நீதிமன்றத்தின் முன் கேள்விக்குட்படுத்துவதற்கு பொது மக்களுக்கு உரிமையுண்டு. அதற்காக தற்போது 7 நாட்களே வழங்கப்படுகின்றன. எனினும், அக்காலப்பகுதி போதாமையினால், அந்த காலப்பகுதியை 14 நாட்களாக அதிகரிப்பதற்கு யோசனை முன்வைத்துள்ளோம்.

மேலும், ஊழல் மோசடிக்கு எதிராக சட்ட வரைபுக்கும் ஏற்கனவே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதால், 22ஆவது திருத்தம் நாடாளுன்றத்தில் நிறைவேற்றுவதுடன், ஊழல், மோசடிகளுக்கு எதிரான சட்டத்தையும் நிறைவேற்றிக்கொள்வோம். அதன்படி, தற்போதுள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் மக்கள் பிரதிநிதிகளின் சொத்து விபரங்களை அறிவிக்கும் சட்ட மூலத்தை நீக்கிவிட்டு, அவற்றை விரைவில் அடையாளம் காணக்கூடிய வகையில் தொழில்நுட்ப வசதிகளை இணைத்து புதிய சட்டமூலமாக அதனை நிறைவேற்றிக்கொள்வோம்.

அதேபோன்று, அமைச்சரவையின் அமைச்சர் ஒருவரின் பதவி இல்லாதுபோனால், அமைச்சு செயலாளரின் பதவியும் இல்லாதுபோகும். ஆனால், 22ஆவது திருத்தத்துக்கு அமைய அமைச்சரின் பதவி பறிபோனாலும் அமைச்சு செயலாளரினால் அவரின் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியும்.

மேலும், அடிப்படைய உரிமைகள் வழக்கின் போது, ஜனாதிபதியின் அதிகாரத்தை நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்த முடியும். சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை தொடர்பான பரிந்துரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக நீக்குமாறு பிரதான எதிர்க்கட்சி கோரிக்கைவிடுத்துள்ளது. எனினும், அரசியலமைப்புக்கு அமைய, அவ்வாறு நீக்க முடியாது. தற்போதைய அரசியலமைப்பின் பிரதான நோக்கம், நிறைவேற்று அதிகாரம் என்பதால் புதிய அரசியலமைப்பிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்க முடியும்.

எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட 60 உறுப்புரைகளும் மக்கள் வாக்கெடுப்பிற்கு விட வேண்டும் என நீதிமன்றம் கூறியுள்ளதால், நாங்கள் அரசியலமைப்பை மீறும் செயற்பட விரும்பவில்லை – என்றார்.

சீரற்ற காலநிலை...

கண்டி மாவட்டத்தில் 837 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 809 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் காணாமல்போயுள்ளனர். காலி மாவட்டத்தில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தில் ஆயிரத்து 666 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 495 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கேகாலை மாவட்டத்தில் 69 குடும்பங்களைச் சேர்ந்த 257 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ் மாவட்டத்தில் ஒரு குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, 461 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 218 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். ஒரு வீடு முற்றாகவும் 257 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

நாட்டில் 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளதாக மண்சரிவு எச்சரிக்கை இன்று (03) வரை நீடிக்கப்பட்டுள்ளது

மழை எச்சரிக்கை

தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி தீவிரமடைந் துள்ள நிலையில், அடுத்த சில நாட்களில் மேற்கு மற்றும் தெற்கு கடற்பரப்புகளிலும் தீவின் தென்மேற்குப் பகுதியிலும் மழை மற்றும் காற்றின் நிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், சப்ரகமுவ மாகாணம், கண்டி, நுவரெலியா, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை போன்ற மாவட்டங்களில் பல இடங்களில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டளவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வங்கிகள் ஊடாக...

தகவல் திணைக்களத்தில் நேற்று (02) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கையர்கள் இலங்கைக்கு பணம் அனுப்புவதனாலேயே எங்களுக்குத் தேவையான சில கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுப்பதற்கான டொலர் கிடைக்கப்பெறுகின்றன. எனினும், கடந்த காலங்களில் அரசாங்கத்தின் கோரிக்கையால் வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பண வீதத்தில் மே மாதத்தில் வளர்ச்சியும் ஜூன் மாதத்தில் வீழ்ச்சியும் ஜூலை மாதத்தில் மீண்டும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு அனுப்பப்பட்டுள்ள நிதியினால் எமக்கு தேவையான எரிபொருள், எரிவாயு மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு முடிந்தது. எனினும், சிலர் சில சில வசதிகளுக்காக உண்டியல் முறை மூலம் பணத்தை அனுப்பினாலும் நாட்டுக்கும் நாட்டு மக்கள் மீதும் அக்கறையுள்ளவர்கள் தாங்கள் உழைத்த பணத்தை வங்கி ஊடாக அனுப்பினர். இதனால், எங்களுக்கு தேவையான சில கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்க முடிந்தது.

இந்நிலையில், நாட்டுக்கு அனுப்பும் பண வீதத்தை அதிகரிப்பதற்காக சில சலுகைகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம். அதன்படி, வெளிநாட்டிலிருந்து வருகைதருவோருக்கு விமான நிலையத்தில் சுங்க வரிச்சலுகை கிடைக்கும். அதன்படி, 90 நாட்களுக்கு குறைவாக இருந்தால் ஆயிரத்து 187.50 டொலர்கள் கிடைக்கப்பெறும். 90 முதல் 365 நாட்கள் இருந்தால் 625 டொலர்களும் 365 நாட்களுக்கு மேலாக இருந்தால் ஆயிரத்து 750 டொலர்களும் கிடைத்தன. இதனூடாகவே பலர் பொருட்களை பெற்றுவந்தனர். இது நாட்டுக்கு டொலர் அனுப்பினாலும் இல்லையென்றாலும் கிடைத்தன.

ஆனால், தற்போது, இந்த சலுகை கொடுப்பனவுகளை வழங்குவதோடு, 2 ஆயிரம் டொலர்களை நாட்டுக்கு அனுப்பியிருந்தால் அவர்களுக்கு மேலதிகமாக சலுகை கொடுப்பனவு வழங்கப்படும். அதன்படி, அவர்கள் வெளிநாட்டிலிருந்து நாட்களுக்கு அமைய, அதாவது 90 நாட்களுக்கு குறைவாக இருந்தால் 787 டொலர்களும் 90 – 365 நாட்களாயின் ஆயிரத்து 225 டொலர்களும் அதற்கு மேலதிகமாக இருந்தால் 2 ஆயிரத்து 350 டொலர்களுமாக சுங்க வரிச்சலுகை அதிகரிக்கப்படும்.

இதேவேளை, 4 ஆயிரத்து 800 டொலர்களை அனுப்பியிருந்தால், ஆயிரத்து 175 டொலர்கள், ஆயிரத்து 585 டொலர்கள் மற்றும் 2 ஆயிரத்து 10 டொலர்களும் வழங்கப்படுவதுடன், 7 ஆயிரத்து 200 டொலர்களை அனுப்பியருந்தால், ஆயிரத்து 627 டொலர்கள், 2 ஆயிரத்து 65 டொலர்கள் மற்றும் 3 ஆயிரத்து 190 டொலர்களும் சுங்க வரிச் சலுகையாக வழங்கப்படும்.

இதேவேளை, ஒரு வருடத்துக்கு 12 ஆயிரம் டொலர்களை அனுப்பியிருந்தால், 2 ஆயிரத்து 587 டொலர்கள், 3 ஆயிரத்து 25 டொலர்கள் மற்றும் 4 ஆயிரத்து 150 டொலர்களுமாக கிடைப்பதுடன், 24 ஆயிரம் டொலர்களை அனுப்பியிருந்தால், 4 ஆயிரத்து 985 டொலர்கள், 5 ஆயிரத்து 425 டொலர்களும் 6 ஆயிரத்து 550 டொலர்களும் விமான நிலையத்தில் சுங்க வரிச்சலுகை வழங்கப்படும். வங்கி ஊடாக பணம் அனுப்பும் அனைவருக்கும் இந்த வரிச்சலுகை வழங்கப்படும்.

இதேவேளை, இலங்கையில் வாகன இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால், 3 ஆயிரத்தை விட அதிக டொலர்களை வங்கி ஊடாக தங்களுடைய குடும்பத்திலுள்ள யாரேனும் ஒருவரின் கணக்குக்கு அனுப்பினால், அவர் அனுப்பியுள்ள பணத்தின் பெறுமதிக்கு அமைய இலத்திரனியல் சைக்கில் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படும். அதேபோன்று, 24 ஆயிரத்துக்கு அதிகமான டொலரை அனுப்பியிருந்தால், அவர்களுக்கு உரிய இலத்திரனியல் வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படும். சூரிய மின் உற்பத்தி உபகரணத்தை இறக்குமதி செய்து மின் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும். ஆனால், தேசிய மின் இயந்திரத்தில் இந்த வாகனங்களை சார்ஜ் செய்வதற்கு அனுமதி வழங்கப்படாது – என்றார்.

ராஜபக்ஷ நிழல் அரசாங்கமே மக்களை அச்சமூட்டுகிறது

அரச வன்முறையையும் மிலேச்சத்தனத்தையும் பயன்படுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

"ராஜபக்ஷ நிழல் அரசாங்கம்" தற்போது அரச வன்முறையையும் அரச மிலேச்சத்தனத்தையும் பயன்படுத்தி மக்களை அச்சமூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனநாயகம் மற்றும் சமூக நீதிக்கான தேசிய மக்கள் பேரவையுடன் இணைந்ததான சட்டத்தரணிகளுடன் நேற்று (02) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயகத்தை சிதைக்கும் புதிய வடிவத்தை சமூகத்தில் உருவாக்க அரசாங்கம் செயற்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதற்கு எதிராக நாம் வலுவாக முன்நிற்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜனநாயகத்திற்காக முன்நிற்கும் சிவில் சமூகம் வழியில் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாகவும், அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், சட்டத்தரணிகளுக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் குடிமக்களின் வாழ்வுரிமைக்காக அவர்கள் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு தனது பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டார்.

அடக்குமுறை மூலம் மக்களுக்கு அரசாங்கம் சொல்லும் செய்தி, போராட்டம் மேற்கொள்ளாது அதிலிருந்து கவனமாக இருங்கள் என்பதா? எனவும், மக்களை எதிர்ப்பதன் மூலம் போராட்டங்களை நிறுத்துங்கள் என்பதே அரசின் செய்தியா? எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

கருத்தொன்றைக் கொண்டிருப்பதும், கருத்தொன்றை வெளிப்படுத்துவதுமான ஜனநாயக ரீதியிலான பேச்சுரிமை பறிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை அரசாங்கம் வழங்க முயல்கிறதா எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

இந்நாட்டின் சட்டத்தரணிகள் சமூகம் போலவே அனைத்து பொறுப்புள்ள குடிமக்களும் கூட அரசாங்கத்தின் இந்த வன்முறைக்கு எதிராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகமாக சமன் ரத்னபிரிய நியமனம்

தொழிற்சங்க செயற்பாட்டாளரான சமன் ரத்னபிரிய, ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் இந்த நியமனம் இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 41 (1)ஆவது உறுப்புரையின் பிரகாரம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலாளர் ஈ.எம்.எஸ்.பீ.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உயர் நீதிமன்றத்தில் மனு

கைதுசெய்யப்படுவதை தடுக்குமாறு கோரிக்கை

தாம் கைதுசெய்யப்படுவதை தடுத்து உத்தரவிடுமாறு கோரி, போராட்டக்களத்தில் முன்னின்று செயற்பட்ட அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளார்.

தனது சட்டத்தரணியூடாக அவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி, விமானப்படைத் தளபதி, கடற்படைத் தளபதி மற்றும் சட்ட மா அதிபர் உள்ளிட்ட தரப்பினர் இந்த மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எவ்வித அடிப்படையான விடயங்களும் இன்றி, பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தன்னை கைதுசெய்ய திட்டமிட்டுள்ளதாக அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக தனது அடிப்படை உரிமை மீறப்படுவதாக உத்தரவிடுமாறும், தாம் கைதுசெய்யப்படுவதை தடுத்து உத்தரவிடுமாறும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டில் பெய்துவரும் அடைமழை காரணமாக அக்குறணை நகர் நேற்று (02) வெள்ளத்தில் மூழ்கியிருந்தது.
(படம்: கண்டி செய்தியாளர்)

பொலிஸாருக்கு எரிபொருள் பெற யாழ்ப்பாணத்தில் புதிய கட்டுப்பாடு

(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கே எரிபொருள் நிரப்புவது எனவும், அவர்களின் தனிப்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் பெற பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஊடாக பிரதேச செயலரின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை மாவட்ட செயலரின் தலைமையில் பிரதேச செயலர்கள், இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், பொலிஸார் ஆகியோருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதன் போது , பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸார் தமது தனிப்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அது தொடர்பில் பிரதேச செயலர்களால், எந்தெந்த பொலிஸ் நிலையத்தினர் அவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்ற விவரமும், முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்புவதற்கு அனுமதிப்பது என்றும், அலுவலகத் தேவைக்கு தமது தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தும் பொலிஸாரின் விவரங்களை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஊடாக பிரதேச செயலகத்துக்கு சமர்ப்பித்து, பிரதேச செயலரின் அனுமதி பெற்றே அதற்கு எரிபொருள் நிரப்பலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் இன்று

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்படும் நிகழ்வுக்கான ஒத்திகை நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று (02) நடைபெற்றது. முப்படையினர் மற்றும் பொலிஸார், கொழும்பு தேவிபாலிகா வித்தியாலய மாணவியர் உள்ளிட்ட பலர் இந்த ஒத்திகையில் பங்கேற்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (03) முற்பகல் 10.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கவுள்ளார். இதற்கு முன்னர் நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி தலைமையில் வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இன்று மு.ப. 09.30 மணிக்கு விசேட விருந்தினர்களின் வருகை இடம்பெறவிருப்பதுடன், இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலில் வருகை தருவார்கள்.

இதனைத் தொடர்ந்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதமர் தினேஷ் குணவர்தன, அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வருகையும் இடம்பெறவுள்ளது.

சபா மண்டபத்துக்கு அழைத்துவரப்படும் ஜனாதிபதி அங்கிராசனத்தில் அமர்ந்து சபைக்குத் தலைமை தாங்குவார். இம்முறை ஜனாதிபதியின் ஆசனத்தில் ஜனாதிபதியின் இலட்சினைக்குப் பதிலாக அரசாங்கத்தின் இலட்சினை பொருத்தப்பட்டிருப்பது விசேட அம்சமாகும். இதன்போது சபாநாயகர், நாடாளுமன்ற குழு நிலையின்போது அமரும் கீழ்ப்பகுதியிலுள்ள ஆசனத்தில் செயலாளர் குழுவுடன் அமர்ந்திருப்பார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியினால் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்தப்பட்டு, சபை ஒத்திவைக்கப்படும். சபை ஒத்திவைக்கப்பட்டதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் முதற்பெண்மணி ஆகியோர் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறும்போதும் இராணுவ அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்படவுள்ளது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர்கள், பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், சட்டமா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட விசேட விருந்தினர்கள் கலந்துகொள்ளவிருப்பதாக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது அமர்வு அனைத்து சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பின்பற்றி நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். எரிபொருள் வரிசையில் மோதல்

நபரொருவர் படுகாயம்

யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டி பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக காத்திருந்தவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் (01)இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் கும்பல் ஒன்றினால் ஒருவர் மிக மோசமாக தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நபரை அங்கிருந்த ஏனையவர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முகக்கவசம் அணிவது அவசியம்

கொழும்பு மாநகர சபை வலியுறுத்து

கொழும்பு மாநகர எல்லை பகுதிக்குள் நடமாடும் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும் - என கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொழும்பு மாநகர எல்லையில் கடமைக்காக வருபவர்கள் மற்றும் கொழும்பு நகர எல்லையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருப்பவர்கள், அனைவரும் முகக்கவசம் அணியவேண்டும்.

கொழும்பு நகர எல்லையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை, பாரியளவு அதிகரித்துள்ளமையால் அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். கொழும்பு நகரில் கடமைக்காக வரும் சிலர், எரிபொருள் வரிசையில் காத்திருப்பவர்கள் முகக்கவசம் அணியாமல் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகர எல்லையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் நீண்ட வரிசையில் காத்து நிற்கும் சிலர், முகக்கவசம் அணிவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருட்களை கொள்ளையடித்த சந்தேகநபர்கள் ஐவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

கெக்கிராவ, கைலபொத்தான பகுதியிலுள்ள வீடொன்றினை உடைத்து பொருட்களை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஐவரை கெக்கிராவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த முறைப்பாட்டினை தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை சந்தேக நபர்கள் ஐவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர்களுடன் சிறிய ரக கை உழவு இயந்திரமொன்று மற்றும் நீர் இறைக்கும் பம்பி ஒன்றையும் குளிரூட்டலுக்கு பொருத்தும் இயந்திரமொன்றையும் (ஏசி மெசின்) குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கெக்கிராவ கைலபொத்தான, அலகமுவ பகுதிகளை வசிப்பிடமாகக்கொண்ட 30, 38, 50, 55 வயதுக்குட்பட்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெக்கிராவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசன்ன வெலிக்கலவின் ஆலோசனைப்படி குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் குலதுங்க உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் ஐவரும் கெக்கிராவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வழக்கறிஞ்சர் உரிமத்தை ரத்து செய்தல்

நீர்கொழும்பு , சிலாபம் வீதி , இல : 42 இல் வசிக்கும் பதிபி மனுவெல் பீரிஸ் வடுகே எமானுவெல் பிதேந்திர பீரிஸ் (தேசிய அடையாள அட்டை எண் 680272905v) மற்றும் வீரஹேந்திகே ரெடினா மிலினா ஜீனா பீரிஸ் (தேசிய அடையாள அட்டை எண் 707110414v) ஆகியோரால் டிசம்பர் 29, 2014 அன்று வழக்கறிஞ்சர் திருமதி ஜயனி பெரேராவால் எழுதப்பட்டு சான்றளிக்கப்பட்ட இல : 5145 ஐக் கொண்ட சிறப்பு அற்றோணி உரிமத்தை ரத்து செய்வதற்காக இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் ரத்து செய்யப்பட்ட உரிமத்திலும் வழக்கறிஞ்சரால் மேற்கொள்ளபடும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளிலும் எனக்கு எவ்வித பொறுப்பும் அல்ல என்பதை இதன் மூலம் தெரிவிக்கிறேன்.

வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

வாகன இலக்கம்	செசி இலக்கம்	தயாரிப்பு வகை
WP-GG - 4XXX	SED52SUD2PV577162	MOTOR CAR VAUXHALL SED52
SG-PU - 8XXX	MAT445051BZR96105	DUAL PURPOSE TATA ACE

• வாகனம் பரிசோதனை செய்தல்	: வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
• வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை	: 2022 ஆகஸ்ட் 04, 05ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. ஆகஸ்ட் 06ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
• டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி	: 2022 ஆகஸ்ட் 06ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
• டென்டர் பத்திரத்தின் விலை	: ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
• டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி	: வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
• டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி	: வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.

முகாமையாளர்,
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

தொலைபேசி இல. 0112 000 000

COMMERCIAL CREDIT

நாட்டில் கடந்த காலங்களில் இனவாதம் சார்ந்த செயற்பாடுகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக தேர்தல் காலங்களில் 'சிங்கள தேசம்' என்ற தொனிப்பொருளில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதில் வெற்றியும் கண்டது.

தமிழ்பேசும் மக்களுக்கென தனியானதொரு தேவைகள் எவையும் கிடையாதென்றும், நாட்டைப் பிளவுபடுத்துவது அல்லது சர்வதேசத்தின் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்வதே அவர்களுடைய நோக்கம் என்றும் தென்னிலங்கையில் பல கதைகள் உருவாக்கிவிடப்பட்டன.

அவையனைத்தும் அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காகவே என நாட்டின் பெரும்பாலான மக்கள் உணர்ந்துள்ள நிலையில், மீண்டும் அந்தப் பிரிவினைவாதத்தை தோற்றுவிக்கும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு அந்த சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

இலங்கையை தோல்வியடைந்த நாடாக மாற்றுவதற்கு பாரிய சூழ்ச்சி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அதற்காக பல்வேறு குழுக்கள் தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த பிரதான கட்சியின் செயலாளரால் தெரிவிக்கப்பட்ட இந்தக் கருத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

"நாட்டில் பாரிய சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக கொவிட் தொற்றுக்குப் பின்னரான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் 2022 மார்ச் மாதத்தில் எரிபொருள் பற்றுக்கொள்வதில் நெருக்கடிகள் ஏற்படும். எனவே, சர்வதேச நாடுகளுக்குச் சென்று கடனுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளுமாறு அப்போதைய நிதி அமைச்சர், வலுசக்தி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கினார்.

அதன் பின்னர் சர்வதேச நாட்டுக்குச் சென்றுவந்த வலுசக்தி அமைச்சர், வருடத்துக்குத் தேவையான எரிபொருளை பெறுதற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாக மக்களுக்கு அறிவித்தார். எனினும், அவ்வறானதொரு விடயம் இடம்பெற்றிருக்கவில்லை. அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு இவ்வாறு பல சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்தூரிமைக் காவலன்

இல. 91, வீஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஒகஸ்ட் 03ஆம் திகதி, புதன்கிழமை

மேலும் வேண்டாம் இனவாத அரசியல்!

சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதால் நாட்டை மீட்டெடுக்க முடியாது. முறையான பொருளாதாரத் திட்டங்கள் அவசியமாகும்.

இந்த நாட்டை தோல்வியடைந்த நாடாக பிளவுபடுத்துவதற்கு பாடுபட்ட குழுக்கள் அதற்கான பணத்தை வழங்கிவருகின்றன. யுத்தத்தால் அடைய முடியாத இலக்கை, வேறு வழியில் அடைய முடியும் என அந்தக் குழுக்கள் நினைக்கின்றன.

உங்கள் உரிமைகளுக்காக வீதியில் இறங்கி போராடுங்கள். ஆனால், அதற்காக போராடும்போது உங்களுடன் இருப்பவர்கள் யாரென்பதையும், அவர்களுக்கு பின்னாலுள்ள இயக்கம் என்னவென்பதையும் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளவேண்டும்.

கனடாவில் உள்ள நபர் ஒருவர் தனது சமூக வலைத்தளத்தில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக பதிவிட்ட கையோடு சர்வதேச அமைப்பொன்று அந்நபரைத் தொடர்புகொண்டுள்ளது. இந்த பிரசாரத்தை முன்னெடுக்குமாறும் அதற்கான நிதி உதவிகளை வழங்கத் தயார் எனவும் கூறப்பட்டுள்ளது.

இப்படியான சூழ்ச்சிகளுக்கு மத்தியிலேயே நாம் அரசாங்கத்தை முன்னெடுக்கிறோம்" என்று சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

உண்மையில், காலி முகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயகப் போராட்டத்தின் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்கள மக்கள் உணரத் தொடங்கினார்கள். எந்த பேதங்களும் இன்றி போராட்டம் முன்னெடுக்கப்பட்டமையால், அதிகார தேவைக்காக சிறுபான்மை மக்கள் எவ்வாறு பிரசாரப்படுத்தப்பட்டார்கள் என்பதையும், சிங்கள மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் உத்தி தொடர்பிலும் அறிந்துகொண்டார்கள்.

குறிப்பாக, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விடயங்களும் போராட்டக்களத்தில் பேசுபொருளாக மாறியிருந்தன.

இந்நிலையில், போராட்டக்காரர்களை தவறானவர்களாக சித்தரிக்கும் வகையிலேயே பொதுஜன பெரமுன கட்சி தனது கருத்தை வெளியிட்டிருக்கிறது.

ஆக, மக்கள் மத்தியில் மீண்டும் பிரிவினைவாதத்தை உண்டுபண்ணி, ஆட்சியின் இருப்பை தக்கவைத்துக்கொள்ளும் செயற்பாட்டை அக்கட்சி முன்னெடுப்பதாகவே தோன்றுகிறது.

நாட்டு மக்கள் உண்மையை புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை வஞ்சித்து மனங்கவரலாம் என்பதற்காக சேடம் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ள ஆளுங்கட்சி முயற்சிப்பதன் முன்னாயத்தமே சாகர காரியவசத்தின் பேச்சுமூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இனவாதத்தால் மக்களை பலவீனப்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமாயின் அது நாட்டுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதுதான் உண்மை. அண்மைக்கால சம்பவங்களும், கடந்தகால நிகழ்வுகளும் இதற்கு எடுத்துக்காட்டு என்பதை இனவாத அரசியல்வாதிகள் நினைவிற்கொள்ள வேண்டும்.

சர்வதேச கடன் அழுத்தங்களுக்கு மத்தியில் இன்று இடம்பெறும் ரணிலின் சிம்மாசன உரை

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 ஜூலை 26 ஆம் திகதி செல்வாய் நள்ளிரவில் நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை செய்த பின்னர் இன்று ஒகஸ்ட் 03 ஆம் திகதி 09 ஆவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை சிம்மாசன பிரசங்கத்தின் மூலம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். இந்த சிம்மாசனப் பிரசங்கத்தின் பின்னர் ஏற்கனவே நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்றிருந்த விடயங்களை தொடர்ந்து முன்னெடுக்க முடியும்.

பொதுவாக பொதுத்தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவாகும் புதிய அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, நாட்டின் நிர்வாகி என்ற வகையிலும் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றின் மூலம் புதிதாக ஜனாதிபதியாக தெரிவாகும் ஒருவர் அவரது பதவியின் முதல் அம்மாசை நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து வைப்பது மரபாக இருந்து வருகின்றது. அதே நேரம் ஒரு நாடாளுமன்றத்தின் பதவிக்கால அமர்வு ஆரம்பிக்கப்பட்டு ஜனாதிபதி கூட்டத்தொடரை ஒத்திவைக்க வேண்டும் என்று கருதினால் அரசியல் அமைப்பின் பிரகாரம் அவருக்கு இருக்கின்ற அதிகாரத்திற்கமைவாக இவ்வாறு கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டு சிம்மாசனப் பிரசங்கத்துடன் அத்தந்த கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படுவது வழங்கமாக இருந்து வருகின்றது.

இலங்கையின் இவ்வாறான நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்ட வரலாற்றை சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால் 1948 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் 50 முறை இவ்வாறான சிம்மாசனப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பு வரையப்படுவதற்கு முன்னர் 25 முறையும், முதலாவது குடியரசு யாப்பு நடைமுறைக்கு வந்ததில் இருந்து 25 முறையுமாக இவ்வாறு நாடாளுமன்ற கூட்டத் தொடர்கள் ஒத்திவைக்கப்பட்டு அவ்வப்போது பிரதம மந்திரிகளாலும், ஜனாதிபதிகளாலும் சிம்மாசனப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன.

அந்த வகையில் 1976 ஆம் ஆண்டு அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்த இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது 46 வருட அரசியல் வாழ்வில் கண்ட கனவாக இந்த ஜனாதிபதி பதவி அமைகின்றது. அந்த வகையில் எதிர்வரும் இரண்டு வருட காலப்பகுதிக்கு இந்நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகிக்கவுள்ள அவரின் இன்றைய உரை இலங்கை வாழ் மக்களுக்கு மாத்திமன்றி, முழு உலகிற்குமே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைய இருக்கின்றது.

ஏனெனில், இலங்கை பாரியதொரு பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகின்ற ஒரு நாடாகும். தற்போதைய நிலையில் பண வீக்கம் 62 வீதத்தை தாண்டி இருக்கின்றது. உள்நாட்டில் வாழ்க்கைச் செலவு மிக மோசமான முறையில் உயர்வடைந்து மக்கள் வாழ்வதற்காக கடுமையான போராட்டம் நடத்தி வருகின்றனர். பாரிய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் அனைத்து விதமான பொருட்கள், சேவைகளின் விலைகள் உயர்வடைந்தும், சேவைத்துறைகள் முடங்கியும் இருக்கின்றன. மொத்தத்தில் நாடு ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில், இந்த ஜனாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கம் இடம்பெறுகின்றது.

அத்துடன், சர்வதேச கடன் நெருக்கடி காரணமாக இந்நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. கடன் கொடுத்த நாடுகள் நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றன. நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமானால் மீண்டும் சர்வதேச நாடுகளிடம் இருந்தும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்தும் புதிய கடன்களை வாங்க வேண்டும்.

ஏற்கனவே இவ்வாறாக அயல் நாடுகளான இந்தியாவிடம் இருந்து இந்த வருடம் மாத்திரம் 400 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள கடன்களையும், சீனாவிடம் இருந்து 700 கோடி டொலர்கள் மதிப்புள்ள கடன்களையும் இலங்கை வாங்கியிருக்கின்றது.

இப்படியாக மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டு பாதாளத்தில் விழுந்துள்ள பொருளாதாரத்தை குறைந்த காலப்பகுதிக்குள் எவ்வாறு உயிர்ப்பித்து மீளக் கட்டியெழுப்புவதென்பதும், அது தொடர்பான புதிய ஜனாதிபதியின் உத்திகள், தந்திரோபாயங்கள் என்னவாக இருக்கும் என்றும் உலகமே இலங்கை மீது கண் வைத்து கண்காணித்த வண்ணம் இருக்கின்றது.

மீண்டும் புதிய கடன் தருவதாக இருந்தால் உள்நாட்டில் அரசியல் ஸ்திரநிலை ஏற்பட வேண்டும். ஆனாலும், தற்போதைய நிலையில், இந்நாட்டில் இதுவரையில் அரசியல் ஸ்திரநிலையைக் காண முடியவில்லை. புதிய அரசாங்கம் என்ற வகையில் பதவியை தக்கவைத்து அமைச்சர் பதவிகளை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக முன்னைய பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்கள் நாடாளுமன்றத்திற்கு உள்ளே புதிய ஜனாதிபதிக்கு ஆதரவை வழங்கி புதிய அமைச்சரவையை ஏற்படுத்த உதவியுள்ளனர்.

அதன்மூலம் பழைய பட்டியலில் இருந்த சிலருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டதால் அவர்கள் அரசாங்கத்தை பாதுகாக்க முயற்சி செய்து வருகின்றனர். ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய 134 பேர் நாடாளுமன்றத்தில் வாக்களித்த போதிலும் பின்னர் நடைபெற்ற அவசரகால நிலைமையை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான வாக்கெடுப்பில் அந்த பலம் 120 ஆக வீழ்ச்சி கண்டிருக்கின்றது. அப்போது வெளியில் இருந்த ஸ்ரீ.ல.சு.கட்சியும், விமல் வீரவங்சவின் கட்சியும் இப்போது மீண்டும் அரசாங்கம் பலமடைவதைக் கண்டு ரணிலுக்கு ஆதரவு தெரிவிக்க முயற்சிசெய்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

முன்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது கடந்த ஏப்ரல் மாதம் முதல் மக்களால் நடத்தப்பட்டு வருகின்ற அரச எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி அதே விமல் வீரவங்ச இப்போது இந்தப் போராட்டம் அமெரிக்காவின் சதி என்று பகிரங்கமாக குற்றஞ்சாட்டி போராட்டத்தை கடுமையாக விமர்சித்து வருவது அவரது கட்சி ரணிலுக்கு ஆதரவு வழங்கத் தயார் என்பதை காட்டுகின்றது.

ஆனாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் நாட்டின் அரசியல் ஸ்திரநிலையை ஏற்படுத்த அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்துவேன் என்று கூளுரைத்து வருகின்றார். ஆனாலும், அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கம் என்பதன் அர்த்தம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற எல்லா கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியதாக அமைய வேண்டும். வெறுமனே பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ள எந்தவிமான ஆசனபலமும் இல்லாத கட்சிகளையும் கொண்ட கூட்டாக அமைய முடியாது. எதிர்க்கட்சியுடன் இணைந்துள்ள சிறிய கட்சிகளையும் அரவணைத்ததாகவே அந்தப் புதிய சர்வகட்சி அரசாங்கம் அமையுமானால் மாத்திரமே நாட்டில் அரசியல் ஸ்திரநிலைக்கு வழிவகுக்கும் சூழல் உருவாகும்.

மறுபுறமாக ஏற்கனவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினரின் இளைஞர் குழுவானது ரணிலும் போக வேண்டும், பூரணமான அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று குரல் எழுப்பி வருகின்றனர். அதில் குறிப்பாக ஜே.வி.பி. முற்போக்கு சோஷலிச முன்னணி போன்ற குழுக்கள் ஈடுபட்டுள்ளன. இதற்கிடையில் இத்தகைய போராட்டத்தை நசுக்கவே அரசாங்கம் அவசரகால நிலைமையை நிறைவேற்றியிருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த அவசரகால நிலைமை மூலம் உள்நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக சர்வதேச அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. அவசரகால நிலைமை, பொதுச்சொத்துகள் பாதுகாப்பு சட்டம் மற்றும் தொல்பொருளியல் பாதுகாப்பு சட்டம் என்பவற்றின் அடிப்படையில் கடந்த சில மாதங்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முக்கியமானவர்கள் வாக்கெடுப்பில் அந்த பலம் கைதுசெய்யப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

எவ்வாறோ எதிர்வரும் குறுகிய காலப்பகுதிக்குள் உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதென்பது நடைமுறை சாத்தியம் இல்லாத ஒன்றாகவே தென்படுகின்றது. காரணம், தற்போது நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காணப்படும் நிலையில், தேர்தல் ஒன்று வருகின்ற போது மேலும் 1000 கோடி ரூபாவுக்கு மேல் செலவு செய்யும் நிலைக்கு நாடு எவ்வாறு தாக்குப்பிக்கும் என்று சிந்திக்க வேண்டியிருக்கின்றது. அதனால் எவ்வாறோ புதிய ஜனாதிபதி 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் பதவி வகிப்பதும், அதற்கிடையில் அரசாங்கம் இன்று அறிவிக்கின்ற புதிய அரச கொள்கையின் மூலம் பொருளாதார நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வு காண்பதென்பதும் தங்கி இருக்கின்றது.

பொதுவாக புதிய ஜனாதிபதி ஒருவரின் அல்லது நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைத்து நடத்தப்படுகின்ற சிம்மாசனப் பிரசங்கத்தின் ஒரே நோக்கம் அரசாங்கத்தின் புதிய கொள்கையை நாட்டு மக்களுக்கும், சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்துவதாகும். அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய அமைச்சின் அரச கொள்கை என்ன என்பதை இன்றைய சிம்மாசன உரை மூலம் வெளி உலகிற்கு அறிவிக்க இருக்கின்றார்.

புதிய அரச கொள்கையானது நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது, அரசியல் ஸ்திரநிலையை ஏற்படுத்துவதற்கான அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதை வெளிப்படுத்துவது, சட்டம், ஒழுங்கு, மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பல்லின சமூகங்களைக் கொண்ட தேசத்தில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் ஏற்படாதவண்ணம் சகவாழ்வு புரிந்துணர்வை கட்டியெழுப்புவது, சர்வதேசத்தின் முன்னால் இலங்கை ஒரு சுயாதீனத்திமும், தன்னாதிக்கம் கொண்ட சுதந்திர தேசம் என்பதை உணர்த்துவது, சர்வதேச நாடுகளை இலங்கையின்பால் கவர்ந்திழுக்கும் வகையிலான வெளிநாட்டுக் கொள்கை என்பவற்றை கருப்பொருளாக கொண்டதாக அமையுமானால் இந்த ஆட்சியின் முன்னோக்கிய நகர்வு இன்றைய சிம்மாசனப் பிரசங்கத்துடன் புத்துணர்ச்சி பெற்றதாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

எம்.எஸ்.அமீர் ஹுசைன்

இன்றைய நாளில்...

* 1858 – இலங்கை தொடருந்து சேவையை ஆளுநர் சேர்.ஹென்றி ஜோர்ஜ் வார்ட் ஆரம்பித்துவைத்தார்.
* 1949 – அமெரிக்காவின் என்.பி.ஏ. (தேசிய கூடைப்பந்தாட்டச் சங்கம்) அமைப்பு உருவானது.
* 1960 – நைஜர் பிரான்ஸிடம் இருந்து விடுதலை பெற்றது.
* 1976 – காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
* 1990 – மிஞ்கிலிங்கையில் காத்தான்குடி பள்ளிவாசலில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு நிகழ்வில் பெண்கள், குழந்தைகள் உட்பட 103 பேர் கொல்லப்பட்டனர்.
* 2006 – திருகோணமலை தோப்பூர் அல்-நூராப் பாடசாலையில் தங்கியிருந்த பொதுமக்கள் 12 பேர் இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் கொல்லப்பட்டனர்.

நக்கல் நமசிவாயம்

சமையல் எரிவாயு தாராளமா கிடைக்க ஆரம்பிச்சிட்டு..! எரிபொருள் பிரச்சினையும் தீர்த்திட்டா போராட்டம் என்றால் என்ன விலையெண்டு மக்கள் கேட்டாலும் கேப்பாங்கள் பாருங்கோ..!

சர்வகட்சி அரசாங்கத்தை ஆதரிக்கும் த.தே.கூவின் முடிவு முஸ்லிம் தலைமைகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்

சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் பகிரங்க அறிவிப்பு

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடைந்து கொள்ளும் வாசலைத் திறக்க வைத்துள்ளதாக சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் வரவேற்றுள்ளார்.

காலத்துக்கேற்ற இந்த முடிவு, மூத்த தமிழ் தலைவர் சம்பந்தன் ஐயாவின் அரசியல் தீர்க்கதரிசனத்தின் அடையாளமாக உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை வரவேற்று அமைச்சர் நஸீர் அஹமட் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சர்வகட்சி அரசாங்கம் அவசியம் அமைக்கப்பட வேண்டும். இந்தத் தேவையிலிருந்து பொறுப்புள்ள அரசியல் கட்சிகள் விலகியிருக்க முடியாது. இவ்வாறு சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதில் ஜனாதிபதி அவசரப்படுவது, பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை காப்பாற்றத்தான்.

இந்தத் தருணத்தை நன்குணர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டைக்காய்களை பதித்துள்ளது. ஒன்று, மக்களின் நெருக்கடியை போக்க உதவுவது. இரண்டாவது, தமிழ்மக்களின் பிரச்சினையை தீர்க்க தருணம் பார்ப்பது.

எனவே, ஒருவகையில் இதுவும் பேரம்பேசும் சக்தியின் ஒரு வடிவமாகவே பார்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு, முஸ்லிம் தலைமைகள் வியூகம் வகுக்காமலிருப்பது ஏன். அரசியல் தீர்வில் நாட்டமில்லையை அல்லது தங்களது சமூகத்துக்கு பிரச்சினைகள் இல்லையென்றா இத்தலைமைகள் சிந்திக்கின்றன.

எனவே, இன்றைய நிலையில் அரசாங்கத்துக்கு எழுந்துள்ள தேவையை அறிந்து, முஸ்லிம் தலைமைகளும் இவ்வாறான அரசியல் வியூகங்களை வகுக்க வேண்டும். இழந்து போய்புள்ள பேரம்பேசும் பலத்தை இலகுவாக பயன்படுத்த கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை முஸ்லிம் தலைமைகள் தவறவிடக் கூடாது என்றும் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டோருக்கு உலருணவு

ஜீவன் தொண்டமான் எம்.பி. நடவடிக்கை

(தலவாக்கலை நிருபர்)

சீரற்ற காலநிலையினால் நுவரெலியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் நிலையினை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் நேற்று (02) கள விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டார்.

இவர் ஹட்டன் பிரதேசத்தில், அலுத்கல, நோட்டன் போன்ற பகுதிகளுக்கு விஜயத்தை மேற்கொண்டார். மேலும் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் தொலைபேசி ஊடாக

தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய, ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டு வாரங்களுக்குதேவையான உணவுப் பொருட்கள் வழங்குவது தொடர்பாக நுவரெலியா மாவட்ட செயலாளர் ஊடாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஆடைகள், போர்வை, தலையணை போன்றவையும் வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பதுளை – ரொக்கில் அருள்மிகு ஸ்ரீகாளியம்மன் தேவஸ்தானத்தில் ஆடிப்பூர பெருவிழா நேற்றுமுன்தினம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பூஜைகள் இடம்பெறுவதையும் அம்பாளுக்கு ருது சோபன நிகழ்வை முன்னிலைப்படுத்தி சீர் வரிசைகள் கொண்டுவரப்படுவதையும் கலந்து கொண்ட அடியார்களின் ஒரு பகுதியினரையும் காணலாம். (பதுளை செய்தியாளர்)

02.08.2022 நாணய மாற்று வீதம்

CENTRAL BANK OF SRI LANKA

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	137 6847	15 3878
கனேடியன் டொலர்	164 6500	177 75 5
சீன யுவான் (ரென்மின்பி)	40 7142	44 346
யூரோ	254 1303	27 336
ஜப்பான் யென்	1 6108	1 7205
சிங்கப்பூர் டொலர்	146 8764	157 8784
ஸ்ரேலிங் பவுன்	324 7 04	342 1515
சுவிஸ் பிராங்ங்	263 5 4	280 0257
ஐ.அ.டொலர்	246 2 66	257 4277

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	846 4105
குவைட்	குவைட் தினார்	0,066 3572
ஓமான்	ஓமான் றியால்	826 54 1
கட்டார்	கட்டார் றியால்	87 374
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 007
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 1710

மூன்று கிலோ தங்கம், 39 ஐபோன்களுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அறுவர் கைது

டுபாயிலிருந்து இலங்கைக்கு வந்த விமானத்தில் வருகை தந்த அறுவர் மூன்று கிலோகிராம் தங்கம் மற்றும் 39 ஐபோன்களுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு நேற்று அதிகாலை வருகைதந்த யூ.எல் 226 என்ற விமானத்தில் வந்த இரண்டு பெண்கள் உட்பட அறுவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 03கிலோகிராம் 158கிராம் தங்கம் மீட்கப்பட்டதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்தது.

சந்தேக நபர்களான ஆண்கள் அக்குறணையைச் சேர்ந்த 45,48,50,51 வயதுடையவர்கள் என

விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். பெண்கள் இருவரும் நீர்கொழும்பு, திருகோணமலை பகுதிகளைச் சேர்ந்த 40,41 வயதுடையவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

விமான நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்துகொண்டதையடுத்து அதிகாரிகளால் இவர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் சுங்கப் பணம் ஏலெத்தமால் தங்க நகைகளை அணிந்துவந்துள்ளமையை அதிகாரிகள் அறிந்துகொண்டுள்ளனர்.

இவர்கள் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

அமைச்சரவை முடிவுகள்

00.08.1011 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

අමාත්‍ය මණ්ඩල තීරණ
அமைச்சரவை முடிவுகள்
CABINET DECISIONS
රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

01. விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

தற்போது நிலவும் எரிபொருள் பற்றாக்குறையால் அரச ஊழியர்களுக்கு தமது போக்குவரத்துப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டமையாலும் மற்றும் எதிர்காலத்தில் உருவாகக் கூடுமென எதிர்பார்க்கப்படும் உணவுப் பற்றாக்குறைக்குத் தீர்வாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான வசதிகளை வழங்கும் பொருட்டு வெள்ளிக்கிழமைகளில் அரச நிறுவனங்களை மூடுவதற்கு 2022.06.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த ஆலோசனைகள் அடங்கிய 03ம்ாத காலப்பகுதிக்கு ஏற்புடைய வகையில் 2022.06.15 ஆம் திகதிய 15/2022ஆம் இலக்க அரச பொது நிருவாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும், தற்போது பொதுப் போக்குவரத்துச் சேவைகள் இயல்பு நிலைக்கு திரும்புவதாலும், விவசாய நடவடிக்கைகளுக்கான அடிப்படைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு போதுமானளவு நேரம் கிடைத்திருப்பதைக் கருத்தில் கொண்டு மேற்படி சுற்றறிக்கையை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இரத்து செய்வதற்கு அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற அடிப்படையில் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளின் செலவுகளை முகாமைத்துவம் செய்தல்

தற்போது நாட்டில் நிலவுகின்ற சவாலுமிக்க நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கு இயலுமான வகையில் அரச வியாபாரங்களின் தொழிற்பாட்டுச் செயற்திறன் மற்றும் நிதி ஒழுக்கங்களை மிகவும் இறுக்கமாக உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, அரச செலவுகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2022.04.26ஆம் திகதி தேசிய வரவு-செலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2022ஆம் இலக்கத்திற்கு இணையாக, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளின் செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக ஆலோசனை சுற்றறிக்கையை வெளியிடுவதற்காக, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

03. உள்ளூர் ஆடைக் கைத்தொழில் உற்பத்திகளுக்குத் தேவையான உபகரணங்களுக்கான இறக்குமதி வரிச் சலுகையை வழங்கல்

கொவிட் - 19 தொற்று நிலைமையிலும் கூட, இலங்கைக்கு வெளிநாட்டு செலாவணியைப் பெற்றுக் கொடுக்கும் பிரதான துறையான ஆடைக் கைத்தொழிற்துறை அமைந்துள்ளது. ஆயினும், மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையாலும், தற்போது நாட்டில் நிலவுகின்ற ஆரோக்கியமற்ற பொருளாதார நிலைமைகளாலும் ஆடைக் கைத்தொழிற்துறைக்குத் தேவையான உள்ளூரில் தயாரிக்கப்படாததுமான உபகரணங்களை இறக்குமதி செய்யும் போது உள்ளூர் ஆடைக் கைத்தொழிற்றுறை உற்பத்தியாளர்கள் பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. அதற்குத் தீர்வாக ஒத்திசைவுக் குறியீட்டு (USCHDE) இலக்கம் 19இன் கீழ் உள்ளூரில் தயாரிக்கப்படாத உபகரணங்கள்/பிரிவுக்கான தீர்வை வரிச் சலுகையை வழங்குவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04. புலம்பெயர் தொழிலாளர்கள் சட்டபூர்வமான முறையில் பண அனுப்பல்களை மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல்

நாட்டில் நிலவுகின்ற வெளிநாட்டு செலாவணி நெருக்கடிக்குத் தீர்வாக புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டிற்கு அனுப்புகின்ற பண அனுப்பல்களை அதிகரிப்பதற்காக வழங்கப்பட வேண்டிய சலுகைகள் மற்றும் ஊக்குவிப்புகள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக 2022.06.27ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் அலுவலர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த அலுவலர் குழுவின் அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மூலம் எமது நாட்டிற்கு முறைசார் வழிகள் மூலம் அனுப்பப்பட்ட வெளிநாட்டுப் பணத்தொகையைக் கருத்தில் கொண்டு குறித்த புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டிற்கு வருகை தரும்போது மேலதிக தீர்வை வரிச் சலுகைக் கொடுப்பனவை வழங்குவதற்கும் மற்றும் இலத்திரனியல் கார் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக குறித்த புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழுவின் யாப்பை சட்ட வலுவாக்குதல்

யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழுவை முறைசார்ந்த வகையில் வலுப்படுத்தி பேரியளவு அதிகாரங்களுடன் சட்ட ரீதியாகத் தாபிக்கப்பட வேண்டிய தேவை கண்டறிப்பட்டுள்ளது. அதற்கமைய, யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழுவை தாபிப்பதற்குத் தேவையான யாப்பின் சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 2021.06.14 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. மலைநாட்டு விவசாய மற்றும் விவசாயத்துச் சட்டத்திற்கான திருத்தம்

பராமலையாத பிள்ளைகளின் திருமணத்திற்கு பெற்றோர்களின் விருப்பு ஒப்புதல் தேவையென குறித்துரைக்கப்பட்டுள்ள, மலைநாட்டு விவாகம் மற்றும் விவாகரத்து சட்டத்தின் 11ஆம் பகுதியை நீக்குவதற்கும் மற்றும் அதில் காணப்படும் ஒவ்வாமையை நீக்குவதற்காகவும் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2021.10.26 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சீரற்ற காலநிலையால் மலையகத்தில் கடும் மழை: மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடனும் பாதுகாப்புடனும் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவம் அறிவுறுத்தல்

(ஹட்டன், மஸ்கெலியா, தலவாக்கலை, இரத்தினபுரி, பெல்மதுளை, கினிகத்தேனை, நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்)

மலையக பிரதேசங்களில் நேற்றுமுன்தினம்(01) முதல் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. இடைவிடாது பெய்து வரும் அடைமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்குடன் பாரிய மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. மேலும், தாழ்நிலப் பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

சிலப் பகுதிகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. அத்துடன் நீர்த்தேக்கங்கள், கங்கைகள், ஆறுகளின் நீர்மட்டங்களும் அதிகரித்துள்ளன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

நாவலப்பிட்டியில் மூவர் நீரில் அடித்துச்செல்லப்பட்டு மாயம்

தேடும் பணிகள் தீவிரம்

(க.கிஷாந்தன்)

சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன்தினம்(01) கெட்டப்புலா அக்கரவத்தை தோட்டத்தில் மூவர் நீரில் அடித்துச்செல்லப் பட்டுள்ளனர்.

மகாவலி ஆற்றுக்கு நீரை ஏந்திச்செல்லும் கினல ஆறான கெட்டப்புலா அக்கரவத்த ஆற்றில் மழை அதிகரிக்கும்போது அங்கிருக்கும் பாலத்துக்கு மேலாக நீர் செல்வது வழமை என்பதுடன் கபிற்றின் உதவியுடனேயே பாலத்தையும் மக்கள் கடக்கின்றனர்.

அவ்வாறே சம்பவதினமும் நடந்துள்ளது. இதன்போது தோட்டத்தொழிலுக்கு சென்றிருந்த 3பிள்ளைகளின் தாயான 45வயதான ஜெயலெட்சுமி, கபிற்றின் உதவியுடன் பாலத்தை கடக்க முற்படுகையில் கை வழுக்கி, ஆற்றில் விழுந்துள்ளார்.

இவரை காப்பாற்ற முயற்சித்த சத்தியசீலன்(52வயது) மற்றும் சந்திரமோகன்(36வயது) ஆகியோர் நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர். அவர்களை தேடும் பணிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வயோதிபப்பெண் சடலமாக மீட்பு; 5வயது சிறுமியை காணவில்லை

கினிகத்தேனை, பொல்பிட்டிய, ஹிட்டிகேம, போகாவலில பிரதேசத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 60 வயதுடைய வயோதிப பெண்ணொருவர் களனி கங்கையின் கிளை ஆற்றின் அருகே உள்ள கால்வாய்க்கு அருகே மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த வயோதிபப்பெண்ணும் அவரது 05வயதான பேரப்பிள்ளையும் நீரோடையொன்றை கடக்க முற்பட்ட வேளை, இருவரும் வெள்ள நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர். முன்பள்ளிக்குச் சென்ற சிறுமியை வீட்டுக்கு அழைத்துச் செல்லும்போதே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது. காணாமல்போன சிறுமியை தேடும் பணிகள் நடைபெறுகின்றன.

இதேவேளை, கினிகத்தேனை விதுலிபுர டெப்லோ கிராமப் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதன் காரணமாக இரண்டு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. இரண்டு வீட்டில் இருந்த ஆறு பேரில் 38 வயதான ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும், அவரை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா - ஹட்டன் வீதியில் மண்சரிவு

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா – ஹட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை நகரத்திற்கு அண்மித்த பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பாதையுடனான வாகனப் போக்குவரத்து முற்றாக தடைபட்டிருந்தது. பின்னர் பொலிஸாரும், பொது மக்களும் இணைந்து வீதியில் சரிந்துள்ள மண்ணை அகற்றி ஒரு வழி போக்குவரத்தாக மாற்றினர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம்(01) மாலை 03 மணியளவில் தலவாக்கலை நகரத்திற்கு அண்மித்த பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளதுடன் மரங்களும் சரிந்து விழுந்துள்ளன.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

ரயில் சேவைகள் நிறுத்தம்

மலையகத்துக்கான ரயில் சேவைகள் முழுமையாக முடங்கியுள்ளன. குறிப்பாக ரயில் பாதைகளில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன், மண்மேடுகளும் சரிந்து விழுந்துள்ளன.

கொட்டகலை - தலவாக்கலை, கிரேட்வெஸ்ட், ரொசல்ல - வட்டவளை, வட்டவளை - கலபொட, இங்குருஓயா ஆகிய ரயில் நிலையங் களுக்கிடையில் இந்த அனர்த்தங்கள் பதிவாகி யுள்ளன. இதனால் கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரை பயணித்த ரயில், நாவலப்பிட்டி ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை வரை பயணித்த ரயில், ஹட்டன் ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கொழும்பு கோட்டை யிலிருந்து பதுளை வரையும் பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை வரையும் பயணிக்கவிருந்த இரண்டு ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஹட்டனில் பாடசாலை மாணவர்களின் நிலை

ஹட்டன் - டிக்கோயா நகர சபை நிர்வாகத்துக் குட்பட்ட ஹட்டன் நகரில் வடிகான் கட்டமைப்பு முறையாக பேணப்படாத காரணத்தினால் மழைகாலத்தில் நகர வீதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.

இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நேற்று முன்தினம் பெய்த மழையினால் பாடசாலை மாணவர்கள் வீதிகளில் பயணிக்கமுடியாத அவலநிலையை அவதானிக்கமுடிகிறது.

நுவரெலியாவில் 648பேர் நிர்க்கதி 3 பேர் உயிரிழப்பு; நால்வர் மாயம்

(எம்.கிருஸ்ணா, செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் காற்றுடன் கூடிய கடும் மழையினால் 254 குடும்பங்களைச்சேர்ந்த 648 பேர் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலகொட தெரிவித்துள்ளார்.

மேலும், 03பேர் உயிரிழந்துள்ள அதேவேளை, 04பேர் நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை - பூண்டுலோயா பிரதான வீதி, மடக்கும்புர பகுதியில் நேற்று (02) பாரிய மண்மேடு சரிந்து விழுந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. (தலவாக்கலை நிருபர்)

கடும் மழை காரணமாக நாவலப்பிட்டி இங்குறுஓய பாலம் சேதமடைந்துள்ளதை காணலாம்.

மேல்கொத்மலை நீர்த்தேக்க இரண்டு வான்கதவுகள் திறப்பு



(க.கிஷாந்தன்)

மலையகத்தில் காலநிலை சீர்கேட்டின் காரணமாக பெய்து வரும் அடை மழையினால் மேல் கொத்மலை நீர்தேக்கப் பகுதியின் நீர்மட்டம் உயர்வடைந்ததால் நேற்றுமுன்தினம் (01) காலை முதல் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால், சென்.கிளயார் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளமை குறிப்பிட்டதக்கது. அணைக்கட்டிற்கு கீழ்ப் பகுதியில் ஆற்றை பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

பிளக்வோட்டர் தோட்டத்தில் 52 குடும்பங்கள் பாதிப்பு

(கினிகத்தேனை நிருபர்)

கினிகத்தேனை பிளக்வோட்டர் தோட்டத்தில் நேற்றுமுன்தினம்(01) ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சுமார் 52 குடும்பங்களைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடியிருப்புகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்து 24 வீடுகளைக்கொண்ட வீட்டு குடியிருப்பு தொகுதியில் ஒரு வீடு சேதமடைந்துள்ளதாகவும் சுமார் மூன்று லயன் குடியிருப்புகளை சேர்ந்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதைபோன்று, 15 சிங்கள கிராம குடியிருப்புகளுக்குள்ளும் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. பாதிக்கப்பட்ட பிளக்வோட்டர் மக்கள் தோட்ட ஆலய மண்டபத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் மண்சரிவில் சிக்குண்டு ஒருவர் பலி

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடை மழையினால் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெப்லோ பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தை 37 வயதான சஞ்ஜீவ விலமலீர் என்பவர் உயிரிழந்துள்ளதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக மழைகாரணமாக குறித்த பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் அப்பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் வெளியேற்றப்பட்டனர். இந்நிலையில் வீட்டில் இருந்த மீன் தாங்கியை எடுக்கச்சென்றவரே இவ்வாறு மண்சரிவில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

நல்லூர் கொடியேற்றம்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று (02) காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறும் மகோற்சவத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 26ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்துகின்ற எந்த செயற்பாட்டையும் தமிழர்களாகிய நாங்கள் ஏற்கமாட்டோம்

செல்வம் எம்.பி. தெரிவிப்பு

(மன்னார் நகர் நிருபர்)

இலங்கை பொருளாதார ரீதியாக நலிவடைந்து மக்களுடைய அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், ஒரு இராஜதந்திர நடவடிக்கையாக இலங்கை அரசாங்கம் செயல்படவில்லை. ஏனெனில், இந்தியாவின் புலனாய்வு அறிக்கையின்படி சீனாவின் உளவுக் கப்பல் வருகை என்பது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பாரியதொரு இடைவெளியை கொண்டுவரும் என நாங்கள் நினைக்கிறோம் - என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை (02) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களுடைய பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் இந்தியா பெரும் பங்கு வகிக்கின்றது.

சீனாவின் உளவு பார்க்கும் கப்பல் இலங்கைநோக்கி வருகை என்பதை இலங்கை அரசு மற்றும் ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும்.

எங்களைப் பொறுத்தமட்டில் இந்தியாவுக்கு பாதுகாப்புப் பிரச்சினை வருமாக இருந்தால் அதனை அனுமதிக்க முடியாது என்பதில் எமது மக்கள் உறுதியாக உள்ளார்கள்.

தற்போது இந்திய மீனவர்களின் வருகை என்பது கவலையான விடயமாக இருந்தாலும் தமிழ் பேசும் சமூகமாகிய நாங்கள் இந்தியாவை ஒருபோதும் கைவிட முடியாது. அதை விட தமிழ்நாடு இன்றைக்கும் எங்களோடு இருந்துகொண்டிருக்கிறது.

எமது ஈழப் பிரச்சினையில் எமக்காக பல பேர் தங்களை எரித்து தற்கொலை செய்திருக்கிறார்கள். அப்படியான ஒரு சூழலில் இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கின்ற சம்பவங்கள் எதுவாக இருந்தாலும் எமது தமிழ்த் தரப்பு எதிர்க்கும் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அண்மையில் சீனாவின் துதுவர் இங்கு வந்து ஒரு சர்ச்சையை கிளப்பிச் சென்ற பின்னணியில் பல எதிர்ப்புகளை எமது மக்கள் காட்டியிருந்தார்கள். ஆகவே இலங்கை அரசாங்கம் இராஜதந்திர நடவடிக்கையாக இரண்டு நாடுகளையும் சாதகமாக வைத்திருக்க வேண்டும் என்றால் இந்தியாவை பகைக்கக்கூடாது என்பது எனது கருத்து. ஏனெனில், இந்தியாதான் பொருளாதார ரீதியில் விழுந்து கிடக்கின்ற இலங்கையை அண்மைக்காலமாக கை தூக்கி வருகிறது. எமது தமிழர்களை பொறுத்தமட்டில் இந்தியாதான் எமக்கான தீர்வை பெற்று தரக்கூடியதும் எங்களுக்கு குரல் கொடுக்கக்கூடிய வல்லமை பொருந்தியதாகவும் இருக்கிறது.

இந்த விடயத்தில் சீனாவின் உளவுப் பார்க்கும் கப்பல் வருகையை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையெனில், இலங்கையை விட்டு இந்தியா அதிக தூரம் செல்லக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

ஆகவே, இந்தியாவை பகைப்பதால் இலங்கைக்கு ஒருபோதும் நன்மை கிடைக்காது. அதை தமிழர்களாகிய நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், முல்லைத்தீவில் எமது மீனவர் சமாசம் ஒன்று கூடி இந்த மீனவ பிரச்சினை தொடர்பான ஆதங்கத்தை வெளியிட்டிருந்ததை உண்மையில் அது ஒரு நியாயமான கோரிக்கையாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

அமைச்சரிடம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் எமது மீனவர்கள் நான்கு மாதங்களுக்கு மேலாக பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள் என்று நேரடியாக தெரிவித்து அது உடனடியாக நடவடிக்கைக்கு வர வேண்டும் கோரிக்கை விடுத்திருந்தோம்.

தற்போது அந்த தீர்மானத்தின்படி அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பாரிய ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வதாக தெரிவித்திருந்தார்கள். எமது மீனவர்களும், விவசாயிகளும் போராட்டத்தில் இறங்கினால் நாடு தாங்காது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கனவே, கோட்டாபய ராஜபக்ஷ விவசாயிகளின் வயிற்றில் கை வைத்ததன் பின்புதான் அவர் நாட்டை விட்டு ஓடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதேபோல், எமது மீனவ சமூகத்தையும் நோகடிக்கும் அல்லது அவர்களுடைய வயிற்றில் அடிக்கின்ற செயற்பாடுகளை இந்த அரசும் செய்யுமானால் அவர்களுடைய போராட்டம் வெடிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே பெற்றோல், டீசலுக்கு கொடுக்கின்ற முன்னுரிமையை மண்ணெண்ணெய்க்கும் வழங்க வேண்டும். இதனால் எமது விவசாயிகளும் மீனவ சமூகமும் பயனடைய வேண்டும். எனவே, முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளும் மீனவர்களும் விடும் கோரிக்கையை நிறைவுசெய்து கொடுக்க வேண்டும். நாம் ஜனாதிபதியிடமும் அமைச்சரிடமும் மீண்டும் வலியுறுத்தி கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார்.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி மன்னாருக்கு திடீர் விஜயம்

(மன்னார் நகர் நிருபர்)

முன்னாள் நிதி அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தருமான ரவி கருணாநாயக்க நேற்றுக்(02) காலை மன்னாருக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

விசேட ஹெலிகொப்டர் மூலம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தார்.

மன்னாருக்கான திடீர் விஜயம் குறித்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோது எவ்வித பதிலும் கூறாமல் அவ்விடத்தில் வந்த வாகனத்தில் ஏறி சென்றுவிட்டார். முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் ரி.எஸ். எவ்.(T.S.F) என அழைக்கப்படும் தனியார் கடலுணவு உற்பத்தி நிலையப் பிரதிநிதிகளும் வருகைதந்த நிலையில், அவர்களின் வாகனத்திலேயே அவர் சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வட்டுக்கோட்டையில் வாள்களுடன் நடமாடிய மூவரில் ஒருவர் சிக்கினார்

(யாழ். நிருபர்)

வட்டுக்கோட்டையில் வாள்களுடன் மோட்டார்சைக்கிளில் நடமாடிய மூவரில் ஒருவர் சிக்கிக்கொண்டார். மேலும் இருவர் தப்பித்துள்ளனர்.

வட்டுக்கோட்டையில் திருட்டு, கொள்ளை மற்றும் வழிப்பறி அதிகரித்துள்ள நிலையில் வாள்களுடன் மக்களை அச்சுறுத்திவந்த நிலையில் ஒருவர் ஊர் இளைஞர்களிடம் சிக்கிக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் சங்கரத்தைச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வட்டு. தெற்கு மற்றும் மூளாய் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு வாள்களுடன் நடமாடியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவும் மோட்டார்சைக்கிள் ஒன்றில் மூவர் வாள்களுடன் நடமாடியுள்ளனர். அதனை அவதானித்த வட்டுக்கோட்டை இளைஞர்களில் ஒருவர் சந்தேகம் கொண்டு வழிமறிக்க முற்பட்டவேளை மூவரும் பயணித்த மோட்டார்சைக்கிள் விபத்துக்குள்ளாகி வீதியில் வீழ்ந்துள்ளனர்.

அவர்களில் இருவர் வாள்கள் இரண்டை கைவிட்டு தப்பித்த நிலையில் ஒருவர் காயங்களுடன் சிக்கிக்கொண்டார்.

வாள்களுடன் சிக்கிக்கொண்ட மூளாயைச் சேர்ந்தவர் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இரண்டு வாள்கள் மற்றும் மோட்டார்சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றி எடுத்துச்சென்றனர்.

திகதி 01.08.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4834
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 7,499,760.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 29,064,421.60
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 7 2 3 6 1 4
கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3076
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,592,620.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 25 37 62 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 66,592,062.40
தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 864
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,812,660.00
J வெற்றி இலக்கம் 22 24 45 73 வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 119,880,891.20
ராசி சப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 143
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,232,160.00
இலக்கிலம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 14 16 43 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,494,485.20
விசேட இலக்கிலம் விருச்சிகம்
வீட்டு 26+ Mega POWER மேகா பவர் மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1182
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,702,940.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 263,537,298.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
Z 01 20 41 46 68
தமிழ் தொலைபேசி நிதியம் National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 மெக்கம்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk

யாழிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில்...

தேவையற்று அலைந்து திரிவோரை அகற்ற பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும்

மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானம்

வாகனங்களை வரிசையில் நிறுத்திவிட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களை சூழ பெருமளவானோர் தேவையில்லாமல் நின்றுகொண்டிருப்பதை தடுக்கும் நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுக்கவேண்டும் - என யாழ். மாவட்ட செயலர் தலைமையிலான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (01) மாலை மாவட்ட செயலரின் தலைமையில் பிரதேச செயலர்கள், இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், பொலிஸார் ஆகியோருடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, தற்போது 'QR' நடைமுறையின் கீழ் எரிபொருள் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதனை ஒரு வாரத்துக்கு அவதானித்து அதன் பின்னர் கிராம அலுவலர் பிரிவு ரீதியான எரிபொருள் விநியோகத்தை நடைமுறைப்படுத்துவதை ஆராயலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், விமான நிலையம் செல்வோர் கொழும்புக்கு செல்லும் வாகனங்களுக்கு பிரதேச செயலரின் பரிந்துரையுடன் இலங்கை போக்குவரத்து சபையின் சாலைகளில் (டிப்போ) எரிபொருள் நிரப்ப முடியும். அந்த வாகனத்துக்கு 'QR' நடைமுறைக்கு அமைவாக 40லீற்றர் டீசல் பெற முடியும் என்பதால், போக்குவரத்து சபை எஞ்சிய 60லீற்றர் டீசலையே விநியோகிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மரக்கறிகளை கொண்டுசெல்லும் வாகனங்களுக்கும் இவ்வாறு டீசல் விநியோகிக்க இலங்கை போக்குவரத்துச் சபை இணங்கியுள்ளது. அத்துடன் பாடசாலை சேவைகளில் ஈடுபடும் வாகனங்கள், தனியார் பஸ்கள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வாகனங்கள், இலங்கை மின்சார சபையின் வாகனங்கள், ரெலிகொம் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை விநியோகிக்க வேண்டாம் என்றும் அவர்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாலையில் வழங்கப்படும் எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களை மாலை 05மணியுடன் மூடுவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டபோதும் அதிலுள்ள சில சிக்கல்கள் காரணமாக அந்த முடிவை எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தமது பகுதிக்குரிய பிரதேச செயலர்களுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ள முடியும் என்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எவ்வளவு வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகம் நடைபெறும் என்பதை முற்கூட்டியே அறிவித்து, அதற்கு மேலதிகமாக வாகனங்களை அனுமதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாகனங்களை வரிசையில் விட்டுவிட்டு, எரிபொருள் நிரப்பு நிலையத்தைச் சூழ அதிகளவானோர் நிற்பதை அனுமதிக்க வேண்டாம் என்றும் அதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அதேபோன்று எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணியாற்றுபவர்களின் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்களை நிறுத்த அனுமதிக்கக்கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸாரின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்புவதற்கு அனுமதிப்பது என்றும், அலுவலகத் தேவைக்கு தமது தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தும் பொலிஸாரின் விவரங்களை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஊடாக பிரதேச செயலகத்துக்கு சமர்ப்பித்து, பிரதேச செயலரின் அனுமதி பெற்றே அதற்கு எரிபொருள் நிரப்பலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் அன்சாருக்கு எதிராக பிடியாணை

(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட கல்முனை மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் தூர்நாற்றம் வீசுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் கல்முனை நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு, இந்த வழக்கில் சுகாதார உயர் அதிகாரிகள் மற்றும் கல்முனை மாநகர ஆணையாளர் உள்ளிட்ட எட்டு பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று (02) வெள்வாய்க்கிழமை மூன்றாவது தடவையாக கல்முனை நீதவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்ட கல்முனை மாநகர

ஆணையாளர் எம்.சீ.அன்சார் மன்றில் ஆஜராகவில்லை. இதனால், அவருக்கு எதிராக கல்முனை நீதவானினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து, குறித்த வழக்கு செப்டெம்பர் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போது கல்முனை நீதவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள இடமொன்றுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சீ.அன்சாரை பணித்து காலக்கெடுவும் விதித்திருந்த நிலையில், அவர் இதுவரை எவ்வித சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன், இன்றைய வழக்கு விசாரணைக்கும் சமூகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண நிறுவனங்களின் தலைவர்களுக்கு இடமாற்றம்

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக ஒரே பதவியில் கடமையாற்றிய திணைக்களத் தலைவர்கள் குழுவொன்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் ஆலோசனைக்கமைய இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக ஒரே திணைக்களத்தில் பணிபுரிந்ததாலும், அந்தப் பதவிகள் தொடர்பான தகுதிகளை பூர்த்திசெய்யாமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு, மாகாண பிரதம செயலாளர் துசித பீ.வனிகசிங்கவிற்கு ஆளுநர் அறிவுரை வழங்கினார்.

அதன்படி, மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளராக கடமையாற்றிய திருமதி வளர்மதி மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய என்.சிவலிங்கம் மாகாண கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண கூட்டுறவு ஆணையாளராக கடமையாற்றிய ஏ.எல்.எம்.அஸ்மி கல்முனை மாநகர சபை ஆணையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

மாகாண கலாசார பணிப்பாளராக கடமையாற்றிய எஸ்.றவீந்தன் மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராகப் பணியாற்றிய சாணிய மாகாண கலாசார திணைக்களத்தின் பணிப்பாளராக

நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மாகாண கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகப் பணியாற்றிய தெய்வேந்திரன் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக பணியாற்றியவர் மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அண்மையில் மாகாண பிரதம செயலாளர் துசித பீ.வனிகசிங்க தலைமையில் வழங்கப்பட்டன.

புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் நேற்று (02) காலை திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்து விடை கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கல்லடி கடற்கரையில் அதிகளவு குளவிக்கூடு; அகற்றும் பணியை முன்னெடுத்த மாநகர சபை

(மட்டக்களப்பு நிருபர்)

கல்லடி கடற்கரையில் காணப்பட்ட பனை மரமொன்றில் இருந்த பாரியளவிலான குளவிக்கூட்டை அப்பகுதிக்கு வருகைதரும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப்பயணிகள் மற்றும் அப்பகுதி மீனவர்களின் நலன்கருதி மாநகர சபையால் அதனை அகற்றும் பணியை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் வசிக்கும் சிலரது முறைப்பாட்டிற்கமைய குறித்த பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதென மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் உள்ளிட்ட குழுவினருடன் மாநகர தீயணைக்கும் படையினரும் குறித்த இடத்திற்கு சென்று சுமார் இரண்டு அடிவரை நீளமான குறித்த குளவிக்கூட்டினை அகற்றுவதற்கான செயற்பாட்டினை பாதுகாப்பாக முன்னெடுத்துள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

விவசாய கிணற்றில் விழுந்த காட்டு யானை

கந்தளாய் வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளால் யானை மீட்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரியபுர விவசாய பகுதியில் காட்டு யானையொன்று நேற்று முன்தினம் (01) மாலை தவறி விழுந்துள்ளது.

பன்னிரண்டு வயதுடைய யானைக் குட்டியொன்றே இவ்வாறு விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விவசாய கிணற்றில் தவறி விழுந்த காட்டு யானையை மீட்க கந்தளாய் வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். சுன்னக்காடு பகுதியிலிருந்து உணவு தேடி சூரியபுர கிராமத்திற்கு வந்த காட்டு யானை மீண்டும் வனப்பகுதிக்குள் சென்றுகொண்டிருந்தபோது பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்ததாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூரியபுர பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் கிராம மக்களுடன் இணைந்து வெட்டப்பட்ட கிணற்றிலிருந்த யானையை பெக்கோ இயந்திரம் மூலம் மீட்டு சுன்னக்காடுக்கு மீண்டும் துரத்தினர்.

வெல்லாவெளியில் யானை தாக்கியதில் விறகு எடுக்கச்சென்ற குடும்பஸ்தர் பலி

(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள திக்கோடை கிராமத்தில் நேற்று முன்தினம் (01) காலை காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுக்காமுனையில் வசித்துவரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான இராசசிங்கம் மூசிகவானகம் என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று கடுக்காமுனையில் இருந்து திக்கோடை காட்டுப் பகுதிக்கு விறகு எடுப்பதற்காக சென்றபோது காட்டில் மறைந்திருந்த யானை தாக்கியதாகவும், அச்சமயம் யானை பிளிறும் சத்தம் அருகிலிருந்தவர்களுக்கு கேட்டபோது சிறிதுநேரத்தில் கிராம மக்கள் அங்கு சென்று பார்த்தபோது குறித்த நபர் உயிரிழந்து காணப்பட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையின்போது தெரிய வருகிறது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்முனை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டார். பிரேத பிரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கல்வியமைச்சின் தீர்மானத்தை மீறி செயற்படும் கிழக்கு பாடசாலைகள்

மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனம்

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள சில பாடசாலைகள் கல்வியமைச்சின் தீர்மானத்தை மீறிச் செயற்படுவது கண்டனத்திற்குரியது, அது குறித்து கல்வி அமைச்சிடம் முறையிடத் தீர்மானித்துள்ளதாக கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சிவக்கொழுந்து ஜெயராஜா நேற்று (02) அறிக்கையொன்றை வெடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நாடு இப்பொழுது பொருளாதார நெருக்கடி, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்ற காரணங்களின் அடிப்படையில் இக்கட்டான சூழ்நிலையில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி இருக்கின்றது. இந்நிலையில், எரிபொருள் தட்டுப்பாட்டினால் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலைமை உள்ளது.



இதனைக் கருத்திற்கொண்டு ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளும்முகமாக கல்வியமைச்சினால் 30.07.2022 திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய மூன்று நாட்களுக்கு பாடசாலைகளை நடத்துமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

அதன்பிரகாரம் மேற்படி திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய மூன்று நாட்களுக்குப் பாடசாலைகள் நடைபெறுமென்றும் ஏனைய புதன், வெள்ளி ஆகிய இரண்டு தினங்களில் நிகழ்நிலை (ரூம்) தொழிற்றுட்பம் வாயிலாகவோ அல்லது விடுமுறைக் காவத்திற்கான கற்றற்செயற்பாட்டினை வழங்கியோ வீட்டில் இருந்தவண்ணம் தொழிற்படலாமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அதிபர்கள் வாரத்தின் 5 தினங்களும் பாடசாலை நடத்துவதாயின், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் விருப்பத்தைப் பெற்று அதன்பின் வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பாடசாலையை நடத்தலாமென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இதனைக் கருத்திற்கொள்ளாது, வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியையும் பெறாது, கிழக்கு மாகாணத்தின் சில பாடசாலைகள் வாரத்தில் 5 நாட்களும் நடத்துப்படுவதாக எமது சங்கத்திற்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, இது குறித்து, கல்வியமைச்சிடம் முறையிடத் தீர்மானித்துள்ளோம்.

காலத்தின் தேவை கருதி எடுக்கப்பட்ட கல்வியமைச்சின் தீர்மானத்தை மீறிச் செயற்படுவது கண்டனத்திற்குரியது என கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவிக்கிறது.

காரைதீவில் 1500 லீற்றர் டீசலுடன் இருவர் கைது

(காரைதீவு நிருபர்)

நிந்தவூரிலிருந்து மாளிகைக்காடு பிரதேசத்துக்கு கொண்டுசெல்ல முயற்சித்த 1500 லீற்றர் டீசலுடன் இருவர் காரைதீவு பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு (01) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காரைதீவு பிரதான வீதி விபுலானந்த சதுக்கத்திலுள்ள பொலிஸ் சோதனைச்சாவடி ஊடாக குறித்த 1500 லீற்றர் டீசலை ஏற்றிய வாகனம் செல்கையில், அதனை நிறுத்தி சோதனை செய்யும்போது இந்த டீசல் கடத்தல் பிடிபட்டது.

நிந்தவூரிலுள்ள எரிபொருள் நிரப்புநிலையம் ஒன்றிலிருந்து கொண்டுவரப்பட்ட 1500 லீற்றர் டீசல், மாளிகைக்காட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட வேளையில் இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடத்தலில் ஈடுபட்டதாக கூறப்படும் இருவர் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் (01) சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில்

ஆஜர்செய்யப்பட்டனர். 1500 லீற்றர் டீசலும் சீல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

பாலமீன்மடு பிரதேசத்தில் கிணற்றிலிருந்து வயோதிபப் பெண்ணொருவர் சடலமாக மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடு பிரதேசத்தில் வீடொன்றின் கிணற்றிலிருந்து மூதாட்டி ஒருவர் சடலமாக நேற்று செவ்வாய்க்கிழமை (02) மீட்கப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வெளிச்ச வீட்டு வீதி பாலமீன்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயதுடைய வள்ளித்தங்கம் கந்தசாமி என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மூதாட்டி தனிமையில் வசித்துவந்த நிலையில், சம்பவதினமான நேற்று காலையில் அவரின் பிள்ளைகள் அங்கு சென்றபோது அவரை வீட்டில் காணாத நிலையில், அவரை அங்கு தேடியபோது, அவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில், இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து நீதிமன்ற அனுமதியை பெற்று கிணற்றில் இருந்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஏறாவூர் நகரசபை பொதுச் சந்தையை மீளப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பம்

இறுதியாக கடை வைத்திருந்தோரை அடையாளம் காண விசேட குழு

(மட்டக்களப்பு நிருபர்)

ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச் சந்தையில் 1987ஆம் ஆண்டில் இறுதியாக கடைகளைக் கொண்டிருந்த பொதுச்சந்தை வியாபாரிகளை அடையாளம் காணும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக விடயத்திற் கென நியமிக்கப்பட்ட ஏறாவூர் நகர சபைக் குழு தெரிவித்துள்ளது.

தற்போது தூர்ந்து சிதைவடைந்துபோய் கிடக்கும் ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச் சந்தையை நவீனமயப்படுத்தி மீளத் ஆரம்பிப்பதற்கான முயற்சியாக இந்த நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இந்த சந்தை கிழக்கில் ஏற்பட்டயுத்தம் காரணமாக 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் இயங்கவில்லை.

அதனடிப்படையில் இந்த சந்தை கடைசியாக இயங்கியபோது அங்கு கடைகளைக்கொண்டிருந்த சந்தை வியாபாரிகளை அடையாளம் காணும் முதற்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தாம் கடைகளைக் கொண்டிருந்தமைக்கான ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு சந்தை வியாபாரிகள் 93 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், இதுவரை 31 வியாபாரிகள் விடயத்திற்கென நியமிக்கப்பட்ட ஏறாவூர் நகர சபைக் குழுவினரிடம் முன்னிலையாகியதாக அக்குழு தெரிவித்துள்ளது. மேலும் 61 பேர் ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளனர். ஏனையோர் அறிவிக்கப்பட்ட தினங்களில் முன்னிலையாகுவர் என தாம் எதிர்பார்ப்பதாகவும் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

பொதுச் சந்தை வியாபாரிகளை அடையாளம் காணும் விடயத்திற்கென நியமிக்கப்பட்ட ஏறாவூர் நகர சபைக் குழுவில் மாகாண சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் என். ஜங்கரன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. ஹாறூன், வருமானப் பரிசோதகர் என். வாவித்தீன், நகர சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். பாத்திமா ஸப்ரினா உட்பட நான்கு நகர சபை உறுப்பினர்களும் இடம்பெற்றிருக்கின்றனர்.

திருமலையிலும் QR முறைமையில் எரிபொருள் விநியோகம் ஆரம்பம்

(திருகோணமலை நிருபர்)

QR முறைமையை பயன்படுத்தி எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கிணங்க திருகோணமலை மாவட்டத்திலும் இந்நடவடிக்கை முழுமையாக நடைமுறைக்கு வந்துள்ளது.

அதற்கிணங்க QR முறைமையை பின்பற்றி எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாடு திருகோணமலை மாவட்டத்திலும் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிந்தது. பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

எனினும், நீண்ட வரிசைகளில் மக்கள் அதனை பெறும் வகையில் காத்திருக்கின்றனர். எரிபொருள் விநியோக செயற்பாட்டை ஒழுங்குபடுத்தும் நோக்கில் QR நடைமுறை அமுலுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

அட்டாளைச்சேனை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஊழல் - மோசடி

விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஆளுநர் பணிப்பு

(திகாமடுல்ல நிருபர்)

அட்டாளைச்சேனை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் சமூக ஆர்வலர்கள் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநருக்கு வழங்கிய முறைப்பாட்டினை ஏற்றுக்கொண்டு அது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூட்டுறவுத் திணைக்கள மாகாண ஆணையாளருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கியிருந்தார்.

குறித்த விடயத்தினை கருத்திற்கொண்ட மாகாண ஆணையாளர் இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஒரு குழுவையும் நியமித்து, அவ்விடயம் தொடர்பில் முறைப்பாட்டாளர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. குறித்த முறைப்பாட்டாளர்கள் தங்களது முறைப்பாட்டுக்கு மேலதிகமாக இன்னும் பல ஆவணங்களை கூட்டுறவு அபிவிருத்தி பிராந்திய அலுவலகத்திற்கு சென்று கையளித்திருந்தனர்.

சமூக ஆர்வலர் அஸ்வர் ஷாலி, ஹாலிம் தலைமையிலான குழுவினர் குறித்த அலுவலகத்திற்கு சென்று பிரதம கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். பரீட்டிடம் தங்கள் முறைப்பாடுகளை கையளித்தனர். மேலும் குறித்த குழுவினர் எதிர்வரும் காலங்களில் மாகான ஆணையாளர், பிரதம செயலாளர் மற்றும் ஆளுநர் ஆகியோரை சந்திப்பதுடன், அட்டாளைச்சேனை கூட்டுறவுச் சங்கத்தினை மீளக் கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

போடியார் புலம்பல்!



கோட்டா நாடு திரும்ப இது நல்ல சகுனம் இல்லையாம் என நரிச்சாத்திரத்த ரணில் ஐயா சொல்லிப்போட்டாரு எலுவா..?

இப்ப ஆடிமாதம் மழை, வெள்ளம் மார்கழி வரையும் தொடரும் கிளிச்சாத்திரம் அவர வரச்சொன்னாலும் நரிச்சாத்திரம் கொஞ்சம் குழிவெட்டி தன்னை பலப்படுத்தி கட்சிகள உடைத்து தனக்கு சாதகமாக மாற்றும் வரையும் கோட்டா வராம இருக்கித்தான் சரி எண்டதுதான் ரணிலிட நிலைப்பாடு!

சவளக்கடை விவசாய கண்டங்களில் இரு வாரங்களில் அறுவடை ஆரம்பம்

தற்போதிருந்தே இயந்திரங்களுக்கு டீசல் வழங்க ஏற்பாடு

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கடயந்தாவ சவளக்கடை விவசாயக் கண்டங்களில் இன்னும் இரு வாரத்தில் நெல் அறுவடை ஆரம்பமாக வுள்ளது. முன்னோடியாக அறுவடை இயந்திரங்களுக்கான டீசலை பெற்றுக்கொடுப்பதில் விவசாய அமைப்புகள் தூரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதற்கென கார்ட் சிஸ்டம் தற்போதிருந்தே அறிமுகப்படுத்தப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

கடந்த வருடத்தைவிட இவ்வருடம் அறுவடைக் கூலி அதிகரிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. அறுவடை நெருங்க மழையும் பொழிய ஆரம்பித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மறைந்த அதிபர் மர்ஹூம் ஹமாமுத்தீனினுக்காக விசேட துஆப் பிரார்த்தனை – நினைவுப் பேருரை

(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை அதிபர்களின் ஏற்பாட்டில் மரணமடைந்த அதிபர் மர்ஹூம் கே.ஹமாமுத்தீனின் நினைவுப் பேருரையும், விசேட துஆப் பிரார்த்தனையும் அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.சி.கஸ்ஸாலி தலைமையில் நேற்று முன்தினம் (01) மாலை அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அதிபர்கள் சார்பாக அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய அதிபரும், அட்டாளைச்சேனை கல்விக் கோட்ட அதிபர் சங்கத் தலைவருமான எம்.ஏ.அன்சார் உரையாற்றினார்.

மர்ஹூம் கே.ஹமாமுத்தீனின் குடும்பம் சார்பாக பிரதி அதிபர் ஐ.எல்.எம்.பாஹிம் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. மர்ஹூம் கே.ஹமாமுத்தீன் நீண்டகால நண்பனும் அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளரும், நிகழ்வின் தலைவருமான MAC.கஸ்ஸாலி விசேட உரை நிகழ்த்தினார்.

மர்ஹூம் கே.ஹமாமுத்தீனின் ஞாபகார்த்தமாக பிரதிபண்ணப்பட்ட யாசீன்கள், இதன்போது குடும்பத்தினர், அதிபர் மற்றும் பிரதி அதிபர்களுக்கு வழங்கப்பட்டன.

இதன்போது மர்ஹூம் கே.ஹமாமுத்தீனுக்காக விசேட துஆப் பிரார்த்தனையை மௌலவி என்.எம்.ஹமீம் மேற்கொண்டார். இந்நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், மர்ஹூம் கே.ஹமாமுத்தீனின் குடும்பத்தினரும் கலந்துகொண்டனர்.

திருமலையில் வன்னி ஹோப் நிறுவனத்தினால் வீடற்றோருக்கு இரு வீடுகள் வழங்கிவைப்பு

(கிண்ணியா நிருபர்)

"வாழ்வதற்கான இல்லறம்" எனும் பெயரிற்றட்டத்தின்கீழ் வன்னி ஹோப் நிறுவனத்தின் ஒருங்கமைப்பில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் மேலும் இரு வீடுகள் நிர்மாணித்து பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (01) மன்றத்தின் தலைவர் எம்.ரீ.எம்.பாரிசினால் வழங்கப்பட்டது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இலுப்பைக்குளம் பிரதேசத்தில் புத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வீடுகள் அற்ற இரு குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டன.

இந்த வீடுகள் நிர்மாணிப்புக்கு ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கின்ற வைத்திய கலாநிதி ஞானசேகி கப்பையாவும் அவுஸ்ரேலியாவில் வசித்த அமரர் குமாரசுவாமி ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தாரும் நண்பர்களும் நிதி அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்

easthamilan@gmail.com

திருமலையில் கெப் வாகனம் விபத்து; இராணுவ வீரரொருவர் படுகாயம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - தொரவப்பொத்தானை பிரதான வீதி மஹதிவுல்வெவ குளத்துக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இடைவிலகிய இராணுவ வீரரொருவர் படுகாய மடைந்துள்ளார்.

இவ்விபத்து நேற்று (02) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தின்போது மொரவெவ - தெவனி பியவர பகுதியைச் சேர்ந்த ரெஜிஷான் திலின (22 வயது) படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

இராணுவத்திலிருந்து இடைவிலகிய இராணுவ வீரர்களை தைரியமூட்டுவதற்காக திருகோணமலை இராணுவ முகாமிலிருந்து கெப் வாகனத்தில் சென்று குறித்த இடைவிலகிய இராணுவ வீரர்களை ஏற்றிச்செல்லும்போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தில் இடைவிலகிய இராணுவ சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன், மற்றுமொரு இராணுவ வீரர் சாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த கெப் வாகனத்தின் சாரதியான இராணுவ வீரரை கைதுசெய்துள்ள தாகவும் விபத்து தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்

தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் மோகன் கோரிக்கை

(கல்லடி நிருபர்)

பயங்கரவாதத் தடைச்சட்டம் இலங்கையில் முற்றாக நீக்கப்பட வேண்டும். அண்மையில் பயங்கரவாத சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்திருத்தத்தில் கூட தற்காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு விமோசனம் கிடைத்ததாகத் தெரியவில்லை - என தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் க.மோகன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு கடந்த சில நாட்களுக்கு முன் விடுதலையான அவர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வூடகச் சந்திப்பு மட்டக்களப்பிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இப்பயங்கரவாதச் தடைச்சட்டத்தினால் கைதுசெய்யப்பட்ட ஏராளமானோர் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்று

ஜனாதிபதியாகக் கடமையாற்றிக்கொண்டிருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கு எங்கள் தமிழ் உணர்வாளர் அமைப்பு வேண்டுகோளொன்றை விடுக்கிறோம். பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிராமம் கிராமமாகச் சென்று பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டுமென்பதற்காக கையெழுத்தைச் சேகரித்தனர். ஆனால், அதற்குப் பின்பு என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியாது.

இது விடயத்தில் அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் ஒருமித்த குரலில் செயற்பட வேண்டும். தமிழ் உணர்வாளர்கள் தமிழ் மக்களின் மீது அக்கறையுடையவர்களாகவும், அரசியல் உரிமைகளில் ஆர்வமுடையவர்களாகவும் செயற்படுகிறோம். மக்களுக்கு எதிர்காலத்தில் அரசியல் தொடர்பான தெளிவூட்டலை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

இந்நிலையில், மக்களின் அரசியல் தெளிவின்மை காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எங்களுக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், இன்று தமிழ்ச் சமூகத்துக்கு ஒரு பேசுபொருளாக அவர்களே செயற்பட்டு வருகின்றனர். இவர்களுடன்தான் வெளிநாட்டுத் தூதுவர்கள் உட்பட முக்கியமானோர் வருகை தரும்போது பேசுகின்றனர். தமிழ் மக்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களில் அவர்கள் பின்வாங்காது செயற்பட வேண்டும் - என்றார்.

கொத்துக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆடிப்பூர பால்குட பவனி



(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு கொத்துக்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆடிப்பூர பால்குட பவனி நேற்று முன்தினம் (01) இடம்பெற்றது.

மாரசூரனை வதைத்து மாரியம்மன் எனப் பெயர் கொண்ட உலகமெல்லாம் இரட்சித்துவரும் அன்னை மாரியம்மன் அகல் விளக்கு ஏரியவைத்த காலத்துக்கு முற்திய காமமாக மட்டக்களப்பில் அருள்பாலித்து வருகின்ற அம்பாளின் ஆடிப்பூர பால்குட பவனியானது ஆலய பிரதம குரு ஸ்ரீ நிஜோத் குருக்களின் தலைமையில், விநாயகர் வழிபாடுகளுடன் ஆரம்பமாகி விசேட கும்ப பூஜைகள் நடைபெற்றதுடன், மட்டக்களப்பு ஆணைப்பந்தி ஆலயத்திலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட அடியார்கள் மஞ்சள் நிற வேலார உடை அணிந்து ஆரம்பிக்கப்பட்ட பாற்குட பவனியானது மட்டக்களப்பு - திருமலை பிரதான வீதியூடாக ஆலயத்தை வந்தடைந்தது.

இதன்போது மூலமூர்த்தி மற்றும் பரிவால மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக பூசைகள் நடத்தப்பட்டு, அதனைத்தொடர்ந்து பிரதான கும்பம் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு விசேட பூஜைகள் நடத்தப்பட்டதுடன், வேத, மேள வாத்தியங்கள், நாதஸ்வரம் முழங்க அடியார்களின் அரோகரா கோஷத்துடன் அம்மனுக்கு பால் அபிஷேகம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு இளையதம்பி அரியநாயகத்தின் 'உணர்வுகளின் சங்கமம்' கவிதை நூல் வெளியீடு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் வெளியீட்டில் இளையதம்பி அரியநாயகத்தின் 'உணர்வுகளின் சங்கமம்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) மட்டக்களப்பு பிள்ளையாரடியில் அமைந்துள்ள மட்டக்களப்பு தமிழ்ச்சங்க கட்டடத்தில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளதுடன், நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி மு.முருகமூர்த்தியும்

கௌரவ அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி க.அருளானந்தமும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

அதிதிகள் வரவேற்பினைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றலும் மற்றும் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில், தமிழ்மொழி வாழ்த்து, வரவேற்புரை, வரவேற்பு நடனம் ஆகியவை இடம்பெற்றதைத் தொடர்ந்து தமிழ்ச்சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தியினால் தலைமையுரை இடம்பெற்றிருந்தது.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டுரை நிகழ்த்தப்பட்டது. நூல் வெளியீடு மிகச்சிறப்பாக இடம்பெற்றதனைத் தொடர்ந்து, நூல் நயவுரை, அதிதிகள் உரை, படைப்பாளி கௌரவிப்பு மற்றும் ஏற்புரை என்பன இடம்பெற்றுள்ளன.

குறித்த நூலின் முதல் பிரதியை மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன் பெற்றுக்கொண்டதுடன், ஏனைய அதிதிகளுக்கும் நூலின் பிரதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானில் அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதல்:

கொல்லப்பட்டார் அல்கொய்தா இயக்கத் தலைவர் ஜவாஹிரி

''இரட்டை கோபுர தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைத்துள்ளது'' - ஜோ பைடன்

அல்கொய்தாவின் தலைவர்களில் ஒருவரான அய்மன் அல்-ஜவாஹிரி (Ayman al-Zawahiri) ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டார் - என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

மூவாயிரம் பேரை பலிகொண்ட 2001ஆம் ஆண்டு அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதலின் மூளையாக செயற்பட்ட 71 வயதுடைய தீவிரவாதி அல்-ஜவாஹிரியின் தலைக்கு 25 மில்லியன் டொலர் விலை வைக்கப்பட்டிருந்த நிலையில்,

ஒசாமா பின்லேடனுடன் அல்-ஜவாஹிரி....

காபூலில் பதுங்கியிருந்த தீவிரவாதி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சிஐஏயின் ட்ரோன் தாக்குதலில் கொலைப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிக்கையில்,

அல்-ஜவாஹிரி கொல்லப்பட்டதன் மூலம் இரட்டை கோபுர தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைத்துள்ளது.

அமெரிக்க மக்களுக்கு அச்சுறுத்தலாக இருந்து தீவிரவாதிகள் எங்கு மறைந்திருந்தாலும் அமெரிக்கா கண்டுபிடித்து தண்டனை கொடுக்கும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இரட்டை கோபுர தாக்குதல்

2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி இரட்டை கோபுர தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவந்த அய்மான் அல்-ஜவாஹிரியை தீவிரவாதிகள் பட்டியலில் அமெரிக்கா சேர்த்தது.

அவரது நடமாட்டத்தை கண்காணித்துவந்த சிஐஏ உளவு அமைப்பு, பல முறை அவர் மீது தாக்குதல் நடத்தி கொல்ல முயன்றது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் தமது கும்பத்தினருடன் இரகசியமாக வாழ்ந்துவந்த அவர் ஆளில்லா விமானம் மூலம் தாக்கி கொல்லப்பட்டுள்ளார். ஜவாஹிரி குடும்பத்தினர் யாருக்கும் சேதம் ஏற்படாமல் வான்வழித் தாக்குதல் வெற்றிகரமாக முடிந்துள்ளதாக ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஒசாமா பின்லேடனுக்கு நெருங்கிய தொடர்புடைய ஜவாஹிரியை அதிமுக்கிய பயங்கரவாதி பட்டியலில் இணைத்திருந்த அமெரிக்க அரசு, கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து தேடி வந்தது. 1993ஆம் ஆண்டு ஜவாஹிரி அமெரிக்காவிற்கு பயணம் மேற்கொண்டு நிதி திரட்டினார். சோவியத் ரஷ்யா நடத்திய போரில் காயமடைந்த ஆப்கன் நாட்டு குழந்தைகளுக்கு அவர் நிதி திரட்டியதாக கூறப்பட்டது. மருத்துவரான ஜவாஹிரி, ஒசாமா பின்லேடனுக்கு மிக நெருக்கமாக இருந்தவர். 4 திருமணங்கள் செய்துகொண்ட ஜவாஹிரி உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தால் அவர் தலைமறைவு வாழ்க்கை நடத்திவந்துள்ளார்.

பாக். மூத்த இராணுவ அதிகாரிகள் பயணித்த ஹெலிகொப்டர் விபத்து

பாகிஸ்தானில் மூத்த இராணுவ அதிகாரிகளை ஏற்றிச்சென்ற ஹெலிகொப்டரொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்துவருவதுடன், பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக பலுசிஸ்தான், சிந்து, கில்கிட்-பால்டிஸ்தான் மற்றும் கைபர் பக்துன்க்வா ஆகிய மாவட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் வெள்ளத்தில் சிக்கி தவித்து வருகின்றனர். பொதுமக்களுக்கு உதவும் வகையில், பாகிஸ்தான் இராணுவம் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மீட்புப் பணியில் பாகிஸ்தான் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அந்த ஹெலிகொப்டரில் 12 இராணுவப் படைகளின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சர்பராஸ் அலி உட்பட 6 மூத்த இராணுவ அதிகாரிகள் இருந்துள்ளனர்.

இதனையடுத்து ஹெலிகொப்டரை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டன. இதனிடையே ஹெலிகொப்டர் பலுசிஸ்தான் மாகாணத்தின் விந்தர் மற்றும் சசி புன்னு இடையே விபத்துக்குள்ளாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், ஹெலிகொப்டரில் பயணித்தவர்களின் நிலை குறித்து தகவல் (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) வெளியாகவில்லை.

உலக செய்திகள்

அமெரிக்காவை அச்சுறுத்தும் குரங்கு அம்மை

நியூயோர்க் - இல்லினாய்ஸை தொடர்ந்து கலிபோர்னியாவிலும் அவசர நிலை பிரகடனம்

இதுவரை 827 பேருக்கு தொற்று உறுதி

குரங்கு அம்மை பரவல் அதிகரித்துவருவதால், அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் அவசர நிலையை பிறப்பித்து ஆளுநர் கேவின் நியூசம் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து கேவின் நியூசம் தெரிவிக்கையில், குரங்கு அம்மை பரவலை தடுக்கவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவசரநிலை அறிவிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நியூயோர்க் மற்றும் இல்லினாய்ஸ் மாகாணங்களில் அவசரநிலை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது கலிபோர்னியாவிலும் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவில் இதுவரை 827 பேர் குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். நியூயோர்க்கிற்கு அடுத்தபடியாக குரங்கு அம்மை பாதிப்பில் இரண்டாவது இடத்தில் கலிபோர்னியா உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெருவில் ஒருவர் உயிரிழப்பு

இதேவேளை, பெருவில் 300இற்கும் மேற்பட்டோருக்கு குரங்கு அம்மை பாதிப்பு ஏற்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உலகளவில் குரங்கு அம்மை தொற்று வேகமாகப் பரவி வருகிறது.

ஒபரேஷன் சக்சஸ்:

தலையொட்டி பிறந்த இரட்டையர்கள் பிரிப்பு

• 33 மணிநேர அறுவை சிகிச்சை
• மூன்று வருடங்களுக்குப் பின்னர் தமது முகத்தைப் பார்த்துக்கொண்ட சிறுவர்கள்

பிரேஸிலில் தலைகள் ஒட்டிப்பிறந்த 3 வயதான சிறுவர்களை பலமணிநேரம் சிக்கல் மிகுந்த அறுவை சிகிச்சைகள் மூலமாக வெற்றிகரமாக பிரித்து மருத்துவர்கள் சாதனைப் படைத்துள்ளனர்.

பிரேஸிலில் ரியோ டி ஜெனீரோ நகரில் நிகழ்த்தப்பட்டிருக்கும் இந்த ஆச்சரியமூட்டும் அறுவை சிகிச்சை நவீன மருத்துவத்தின் மற்றொரு சாதனையாக பார்க்கப்படுகிறது. வடக்கு பிரேஸிலில் ஒரு கிராமத்தில் தலைகள் ஒட்டி பிறந்த இரு சிறுவர்களை பிரிக்கும் முயற்சியில் ஹெலோ நிமியிர் மூளை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பிரிட்டன் ஜெமினி என்ற மூளை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் களமிறங்கினர்.

ஆர்த்தர், ஃபெர்னான்டோ எிமா என்ற 2 சிறுவர்களையும் பிரிப்பதற்கான கடைசி இரண்டு அறுவை சிகிச்சைக்கு மட்டும் 33 மணிநேரம் பிடித்துள்ளது. அறுவை சிகிச்சை முடிந்ததும் மருத்துவர்கள், செவிலியர்கள் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி ஆனந்தக்கண்ணீர் வடித்தனர். இந்த இரண்டு சிறுவர்களின் மூளைகளின் ஒரு பகுதி இருவருக்கும் பொதுவாக இருந்தது. இதயங்களுக்கு செல்லும் ஒரு முக்கிய நரம்பும் இருவருக்கும் பொதுவான பாதையில் இருந்தது. இதனால் பல மாதங்கள் ஆய்வு செய்த மருத்துவர்கள் மெய்நிகர் எனப்படும் விர்ச்சுவல் முறையில் பல அறுவை சிகிச்சைகளுக்கு முன்னோட்டம் நடத்தினர்.

நீண்ட முயற்சிகளுக்குப் பின்னர் தலைகள் பிரிக்கப்பட்டன. சிறுவர்கள் 3 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒருவரது முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அடுத்த ஆறு மாதங்கள் இவர்கள் மருத்துவமனைகளிலேயே சிகிச்சை பெறுவர். 60,000 பிறப்புகளில் ஒரு பிரசவத்தில் இது போன்ற சூழற்சைகள் உடல் ஒட்டி பிறக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மியன்மாரில் அவசரநிலை மேலும் 6 மாத காலம் நீடிப்பு

மியன்மாரில் பிறப்பிக்கப்பட்ட அவசர நிலை மேலும் 6 மாத காலம் நீடிக்கப்படுவதாக அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

மியன்மாரில் கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பரில் நடந்த தேர்தலில் முறைகேடுகளினால் ஆங் சாங் சூகி தலைமையிலான ஜனநாயக தேசிய கட்சி வெற்றி பெற்றதாகக் கூறி, கடந்தாண்டு பெப்ரவரியில் இராணுவம் ஆட்சியை கலைத்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை இராணுவம் இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.

இதைத் தொடர்ந்து, ஆட்சி நிர்வாகத்தைக் கைப்பற்றிய ஜெனரல் மின் ஆங் லைங், ஓராண்டு அவசரநிலை பிறப்பித்தார். இந்நிலையில், அவர் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் ஆற்றிய உரையில், ''நாட்டில் அமைதி திரும்பவும், ஜனநாயக அமைப்பை உருவாக்கவும், பொதுத் தேர்தல் நடத்தவும் கால அவகாசம் தேவைப்படுவதால், அவசரநிலை மேலும் 6 மாதம் நீடிக்கப்படுகிறது'' என்று தெரிவித்தார்.

இதையடுத்து, அங்கு அவசரநிலை நீடிப்பு உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

''மோடி ஜி, விலைவாசி உயர்வுக்கு நீங்கள் மிகப் பெரிய காரணமாக இருக்கிறீர்கள்..!''

''பென்சில் கேட்டதற்காக என்னுடைய அம்மாவிடம் அடி வாங்கினேன். நான் என்ன செய்வது?''

- பிரதமருக்கு 6 வயது சிறுமி கடிதம்



விலைவாசி உயர்வால் தான் சந்திக்கும் துயரங்கள் பற்றி முதலாம் வகுப்பில் படிக்கும் 6 வயது சிறுமி இந்திய பிரதமர் மோடிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் கன்னூஜ் மாவட்டத்திலுள்ள சிப்ராரூ கிராமத்தைச் சேர்ந்தவர் விஷால் துபே. இவரது மகள் கீர்த்தி (6 வயது) அப்பகுதியிலுள்ள பாடசாலையில் முதலாம் வகுப்பில் படித்து வருகிறார். இந்நிலையில், பாடசாலையில் பென்சிலை தொலைத்து விட்டு, வேறு பென்சில் கேட்டதற்காக கீர்த்தியை கண்டித்து அவரது தாய் அடித்துள்ளார்.

இதையடுத்து, விலைவாசி உயர்வினால்தான் தனக்கு பென்சில், ரப்பர் மறுக்கப்படுவதாக நினைத்த அந்த சிறுமி, பிரதமர் மோடிக்கு ஹிந்தி மொழியில் உருக்கமாகக் கடிதமொன்றை எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில்,

''என்னுடைய பெயர் கீர்த்தி துபே. நான் முதலாம் வகுப்பு படிக்கிறேன். மோடி ஜி, விலைவாசி உயர்வுக்கு நீங்கள் மிகப் பெரிய காரணமாக இருக்கிறீர்கள். பென்சில், ரப்பர் விலை கூட உயர்ந்துவிட்டது. மெகியின் விலையும் அதிகரித்துள்ளது. பென்சில் கேட்டதற்காக என்னுடைய அம்மாவிடம் அடி வாங்கினேன். நான் என்ன செய்வது? என்னுடைய பென்சிலை சக மாணவர்கள் திருடி விடுகின்றனர்'' என்று எழுதியுள்ளார்.

இந்தக் கடிதம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. இதைப் பற்றி சிறுமியின் தந்தை தெரிவிக்கையில், 'இது என் மகளின் மனதின் குரல்' எனத் தெரிவித்துள்ளார்.

ஈசான் ஆற்றில் மிதந்துவந்த இராமர் பெயர் பொறிக்கப்பட்ட கல்

உத்தரப்பிரதேசத்தின் மௌபின்பூரி மாவட்டத்தில் பாயும் ஈசான் ஆற்றில் இராமர் பெயர் பொறிக்கப்பட்ட மிதக்கும் கல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தானா பேவர் கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகள் சிலர் ஆற்றில் மீன்பிடிக்கச் சென்றபோது, கறுப்பு நிறத்தில் ஆற்றில் மிதந்து வரும் கல்லை கண்டெடுத்துள்ளனர். சுமார் 5.7 கிலோ எடை கொண்டுள்ள குறித்த கல் இராமாயண காலத்தில் இலங்கைக்கு இராமர் பாலம் கட்ட பயன்படுத்தப்பட்டதாகவும், இராமேஸ்வரத்திலிருந்து வந்திருப்பதாகவும், அந்தக் கல்லை பிரதிஷ்டை செய்து வழிபட முடிவெடுத்துள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

பருவநிலை மாற்றம்; கடல் நீர் மட்டம் உயர்வு: மூழ்கும் செரூவா தீவு; அகதிகளாகும் தீவுவாசிகள்

பிஜி நாட்டின் தீவு கூட்டங்களில் ஒன்றான செரூவா தீவு கடல் நீர் மட்டம் உயர்ந்து வருவதால் மெல்ல மெல்ல தண்ணீரில் மூழ்கி வருகிறது. இதனால், அந்த தீவில் வசிப்பவர்கள் வேறு இடங்களுக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடல் நீர் உள்ளே புகுவதால், இப்போதெல்லாம் தங்கியிருக்கும் அறைக்கு அருகிலேயே படகுகள் வந்துவிட்டதாக அந்த தீவு வாசிகள் தெரிவிக்கின்றனர்.

தீவை விட்டுப் பிரியும் நிலைக்குத் தள்ளப்பட்டதை எண்ணி அவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி ரணிலின் இல்லத்துக்கு தீ வைத்த மேலும் மூவர் கைது

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்துக்கு தீவைத்தமை தொடர்பில் மேலும் மூவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

விசேட சுற்றிவளைப்பின் மூலம் பிலியந்தலை மற்றும் நாரஹென்பிட்டி ஆகிய பகுதிகளில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள், மடபாத்த மற்றும் கொழும்பு 05 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18முதல் 22வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்துக்கு தீ வைத்தமை தொடர்பில் மேலும் பல சந்தேக நபர்களை தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி அல்வி ஜனாதிபதி ரணிலுக்கு வாழ்த்து

ஜனாதிபதியாகதெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு, பாகிஸ்தான் ஜனாதிபதி கலாநிதி அரீப் அல்வி தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் விடேவாழ்த்துச் செய்தியை தெரிவித்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி, இரு நாடுகளுக்கிடையில் நிலவுகின்ற உறவை இரு நாட்டினதும் முன்னேற்றத்திற்காக மேலும் வலுப்படுத்துவதேதமது எதிர்பார்ப்பாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ், இலங்கை தற்போதுள்ள பொருளாதார சவால்களை வெற்றிகொள்ளும் எனக் குறிப்பிட்டுள்ள அரீப் அல்வி, எதிர்காலத்தில் இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கிடையில் அனைத்து துறைகளிலும் ஒத்துழைப்பை மேம்படுத்தி, மிக நெருக்கமாக செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

பிரபல நடிகர் ஜெக்கன் எந்தனிக்கு ஆசி வேண்டி கங்காராமை விகாரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை விசேட பூஜை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, அமைச்சரின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவன தலைவருமான அனுச பெல்பிட்ட, ரூபவாஹினி தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் டப்ளியூ.பீ. களேஎல, டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

எரிபொருள் பதுக்கிய நபர் புத்தளத்தில் கைது

(ஜோட் சமந்த)

புத்தளத்தில் பெற்றோல், டீசல் ஆகியவற்றை பதுக்கிவைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சந்தேக நபரிடமிருந்து 25 வீற்றர் டீசலும் 150 வீற்றர் பெற்றோலும் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து புத்தளம் நகர், மூன்றாம் ஒழுங்கையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பதின்ம வயது பிக்குமார் மீது பாலியல் ரீதியான துன்புறுத்தல்

புத்தளத்தில் தலைமை பிக்கு கைது

பதின்ம வயது பிக்குமார் இருவர் மீது பாலியல் துன்புறுத்தல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் புத்தளத்தில் தலைமை பிக்கு ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், கொட்டுகச்சிய பகுதியைச் சேர்ந்த தலைமை பிக்கு ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாலியல் குற்றச்சாட்டு தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய, அந்தப் பிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் குறித்த விசாரணையில் தங்கியிருக்கும் 53 வயதானவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். பாதிக்கப்பட்ட பதின்ம வயது பிக்குமார் இருவரும் சிகிச்சைக்காக புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உல்லாசப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தகவல்

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் சுமார் 43,000 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் தம்மிக்கா விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின், சுற்றுலா ஹோட்டல்களின் மின் பிறப்பாக்கிகள் உள்ளிட்ட பிற தேவைகளுக்கும் எரிபொருளை வழங்கும் முறை தற்போது நடைமுறையில் உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இதன்படி, இம்மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் மேலும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

ருக்மணி தேவி, ரி.பி. ஜாயா, அம்பேத்கர் ஆகியோருக்கு நினைவேந்தல் நிகழ்வு



(இக்பால் அலி)

மலையக கலை கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் மறைந்த சிங்களத் திரைப்பட நடிகையும் பிரபலயமான பாடகியுமான ருக்மணி தேவி, இலங்கையில் தேசியத் தலைவர்களில் ஒருவரான ரி. பி. ஜாயா, இந்தியாவில் தலித் மக்களுக்காக போராடிய கலாநிதி அம்பேத்கர் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு சங்கத்தின் தலைவர் ராஜா ஜெய்கின்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக பேராதனை பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் உபுல் திசாநாயக்க கலந்துகொண்டார்.

இதன்போது நாட்டின் உயர்சிக்கலாகவும் மக்களின் மேம்பாட்டிற்காகவும் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய மக்கள் நலன் பேணும் மனித நேயமிக்கவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரிகள், கலைஞர்கள், சமூக சேவையாளர்கள் எனப் பல கலந்து கொண்டனர். விசேடமாக கொரோனா காலத்தில் கண்டியில் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய கண்டி மாநகரசபையின் சுகாதார உத்தியோகஸ்தர் தி.தியாகராஜாவுக்கு சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி மாலை அணிவித்து கௌரவித்தார். பேராசிரியர் துரைமனோகரன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

பாதுகாப்புச் செயலாளரை சந்தித்து பிரியாவிடை பெற்றுகொண்ட அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்

பதவி காலத்தை நிறைவு செய்துகொண்டு நாடு திரும்பவுள்ள இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலே, பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்து பிரியாவிடை பெற்றுக் கொண்டார். ஸ்ரீஜயவர்தனபுர, கோட்டேயிலுள்ள, பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்தில் அண்மையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகைதந்த உயர்ஸ்தானிகரை ஜெனரல் கமல் குணரத்ன வரவேற்றார். இருவருக்கும் இடையில் இடம்பெற்ற சுமுகமான சந்திப்பின்போது, அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர், தனது பதவிக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக பாதுகாப்பு அமைச்சுக்கு உயர் ஸ்தானிகர் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவிடம் பாராட்டுகளை தெரிவித்தார். இந்த சந்திப்பினை நினைவு கூறும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் நினைவுச் சின்னமொன்றையும் வழங்கி வைத்தார்.

குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழில் தேசிய அடையாள இலக்கத்தை உள்ளீடு செய்யும் நடைமுறை ஆரம்பம்

புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழில், தேசிய அடையாள இலக்கத்தை உள்ளீடு செய்யும் நடைமுறை, நேற்றுமுன்தினம் (01) முதல் ஆரம்பிக்கப்படுவதாக, ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குறித்து திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்துக்கமைய, குழந்தை பிறக்கும்போது, பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழில், ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையான இலக்கம் உள்ளீடு செய்யப்பட வுள்ளது.

மேற்படி இரு திணைக்களங்களுக்கும் இடையில் இணையம் மூலம் தகவல்கள் பரிமாற்றம் இடம்பெறும். இந்த புதிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும், பரீட்சார்த்த திட்டம், கம்பஹா, தெஹிவளை, ஹங்குராங்கெத்த, குருணாகல், இரத்தினபுரி மற்றும் தமன்கடுவ ஆகிய பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு பிறப்புச் சான்றிதழை பெறும் ஒருவர், தனக்கு 15 வயது பூர்த்தியானதன் பின்னர், தேசிய அடையாள அட்டையை பெற விண்ணப்பிக்கையில், மேற்படி பிறப்புச் சான்றிதழில் உள்ள அடையாள இலக்கத்தி லேயே தனக்கான தேசிய அடையாள அட்டையை பெறமுடியும்.

இந்த முறைமையின் ஊடாக, ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும்போது, பிறப்பு முதல் அனைத்து நடவடிக்கைகளுக்காகவும், ஒரே அடையாள இலக்கம் பயன்படுத்தப்படுவதால், தனி நபர் கல்வி, சுகாதாரம், நிதி மற்றும் சமூக தரவுகளை திரட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இலகுவானதாக அமையும்.

மேலும், ஒரே இலக்கத்தின் கீழ் அனைத்து தரவுகளும் காணப்படுவதால், குறித்த நிறுவனங்கள் ஊடாக பொதும க்களுக்கு இலகுவாக சேவைகளை பெற்றுக்கொள்ளவும் முடியும் என ஆட்பதிவு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள் ளது.

சீரற்ற காலநிலையில் பாதிப்படையும் மக்களுக்கு உதவ கடற்படையின் 48 நிவாரண குழுக்கள் தயார் நிலையில்

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் பாதிப்படையும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கடற்படையின் 48 நிவாரணக் குழுக்கள் நேற்று (02) முதல் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உளகேதென்னவின் ஆலோசனைக்கமைய, சீரற்ற காலநிலையின் மத்தியில் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு அவசர நிலைமைகளின் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கு கடற்படை கட்டளை முகாமின் 27 நிவாரணக் குழுக்களும், தென் கடற்படை கட்டளை முகாமின் 08 நிவாரணக் குழுக்களும் மற்றும் வடமேற்கு கடற்படை கட்டளை முகாமின் 13 நிவாரணக் குழுக்களும் தயார் நிலையில் இருக்கின்றன.

வெள்ளப்பெருக்கு அவசர நிலைமைகளின் போது நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்காக மேற்கு கடற்படை கட்டளை பிரிவினூடாக இரத்தினபுரி புதிய நகரத்துக்கு இரு நிவாரண குழுக்களும் மேலுமொரு குழு இரத்தினபுரி, முவகம ஆகிய பிரதேசங்களுக்கு நேற்று முன்தினம் (01) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

துளிச் செய்திகள்

மாத்தறை மாலிம்படை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுபே சந்தியில் 105 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். சந்தேக நபர் ஹக்மனவைச் சேர்ந்த 37 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★

இரத்மலானை பொருளாதார மத்திய நிலையத்தில் கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் ஏற்கனவே பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★

தம்புத்தேகம, ஐந்தாவது மைல்கல் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 32 வயதான சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★

குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யந்தம்பலாவ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று எதிரில் வந்த காருடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் 44 வயதான நபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

nl l nm s l -

இலங்கையின் மற்றுமொரு பதக்க வாய்ப்பு நழுவியது

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் நடைபெற்றுவரும் 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை இதுவரையில் ஒரேயொரு பதக்கத்தை வென்றிருக்கும் நிலையில், மற்றுமொரு பதக்கத்தை வெல்லும் வாய்ப்பு நழுவிப்போனது.

முன்னணி நீச்சல் வீராங்கனையான கங்கா சௌவிர்தன், பெண்களுக்கான 200 மீற்றர் பின்னோக்கிய நீச்சல் போட்டியில் இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை மயிரிழையில் தவறவிட்டார். இறுதி 16 வீராங்கனைகளுக்கான சுற்றில் 2ஆவது ஹீட்டில் பங்கேற்ற கங்கா சௌவிர்தன், போட்டித்தூரத்தை 2 நிமிடம் 26.63 செக்கன்களில் நிறைவுசெய்து 6ஆவது இடத்தைப் பிடித்துக்கொண்டார்.

இதன்மூலம் ஒட்டுமொத்த வரிசையில் 10ஆவது இடத்தைப் பிடித்துக்கொண்ட இவர், இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை இழந்துள்ளார். இறுதிப்போட்டிக்கு 8 வீராங்கனைகள் தெரிவுசெய்யப்பட்ட நிலையில், கங்கா சௌவிர்தன இறுதிப்போட்டிக்கான மேலதிக வீராங்கனைகள் இருவருக்கான பட்டியலில் இடம்பெற்றிருந்தார்.

ஆரம்பம் முதல் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஆஸி.

2022 பொதுநலவாய விளையாட்டு விழாவின் ஐந்தாவது நாள் போட்டிகள் நேற்று நிறைவுக்கு வந்த நிலையில், இலங்கை நேரப்படி நேற்று நண்பகல் முடிவடைந்த போட்டிகளின் அடிப்படையில், பதக்கப் பட்டியலில் அவுஸ்திரேலியா தொடர்ந்தும் முதல் இடத்தில் உள்ளது. 31 தங்கம், 20 வெள்ளி, 20 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தமாக 71 பதக்கங்களை வென்று அவுஸ்திரேலியா ஆரம்பம் முதல் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது.

21 தங்கம், 22 வெள்ளி, 11 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தமாக 54 பதக்கங்களுடன் தொடரை நடத்தும் இங்கிலாந்து இரண்டாவது இடத்தில் உள்ளது. நியூசிலாந்து 13 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாம் இடத்திலும், 6 தங்கம், 11 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களுடன் கனடா 4ஆவது இடத்திலும் உள்ளன.

இதுவரையில் ஒரேயொரு வெண்கலப் பதக்கத்தை (பளுதூக்கல்) வென்ற இலங்கை, ஒட்டுமொத்த புள்ளிப்பட்டியலில் 24ஆவது இடத்தில் காணப்படுகிறது.

கார்த்திக்கின் கம்பேக்கை பாராட்டிய பட்

இந்திய அணியில் நிரந்தர இடமின்றி தவித்த 37 வயதான தினேஷ் கார்த்திக், கடந்த ஐ.பி.எல். தொடருடன் சிறந்த கம்பேக் கொடுத்தார். ரி20 கிரிக்கெட்டுக்கான இந்திய அணியில் அவர் தவிர்க்க முடியாத பேட்ஸ்மேனாக உருவாகியுள்ளார். அவரது ரோல் ஆட்டத்தை முடித்து கொடுக்கும் ஃபினிஷர் பணி என்பது தெளிவாக உள்ளது. அதற்கு ஏற்றவகையில் அவரும் சிறப்பாக விளையாடி வருகிறார். மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் ரி20 போட்டியில் 19 பந்துகளில் 41 ஓட்டங்களை சேர்த்து அசத்தினார்.

அவரது கம்பேக் குறித்து கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்கள் தொடங்கி முன்னாள் வீரர்கள் வரை அனைவரும் புகழ்ந்துள்ளனர். அதில் லேட்டஸ்ட் நபராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் சல்மான் பட் இணைந்துள்ளார்.

''நல்ல வாய்ப்பாக தினேஷ் கார்த்திக் இந்தியாவில் பிறந்துவிட்டார். அவர் மட்டும் பாகிஸ்தானில் பிறந்திருந்தால் அவரது வயதுக்கு இங்கு உள்நாட்டு கிரிக்கெட் கூட விளையாடி இருக்க முடியாது. இந்திய கிரிக்கெட் அணியின் வருங்கால பெஞ்ச் ஸ்ட்ரென்த் செம ஸ்டிராங்காக உள்ளது. அது அப்பட்டமாக தெரிகிறது. தரமான அணியை இந்தியர்கள் கட்டமைத்து உள்ளார்கள்.''

''சூர்யகுமார் யாதவ், ஷ்ரேயஸ் ஐயர், அர்ஷ்தீப் சிங், சும்மன் கில் என திறமையான இளம் வீரர்கள் நிறைய பேர் இந்திய அணியில் நிறைந்துள்ளனர். பாகிஸ்தான் அணியை பாருங்கள் ஷஹீன் அஃப்ரிடியை பெரிதும் நம்பி இருக்க வேண்டிய சூழல் உள்ளது'' என தெரிவித்துள்ளார் சல்மான் பட்டின்.

இந்தப் பாராட்டு கவனம் பெறுகிறது.

மகிழ்ச்சியின் உச்சத்தில் மேசை மேல் ஏறி ஆட்டம் போட்ட வீராங்கனைகள்

மகளிர் யூரோ கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கோல்கள் கணக்கில் 8 தடவைகள் சம்பியனான ஜேர்மனியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. இதன்மூலம் 56 ஆண்டுகால ஐரோப்பிய மகளிர் சம்பியன்ஷிப் தொடரின் வரலாற்றில் முதல் முறையாக இங்கிலாந்து அணி சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தது.

இந்த வெற்றிக்குப் பின் இங்கிலாந்து அணியின் மேலாளர், நிர்வாகிகள் செய்தியாளர்களை சந்தித்தனர். இந்த நிகழ்வு பல்வேறு தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது. அப்போது, அங்கு வந்த இங்கிலாந்து வீராங்கனைகள் செய்தியாளர் சந்திப்பில் பேசிக்கொண்டிருந்த அணியின் மேலாளர், நிர்வாகிகளுக்கு நடுவே சென்றனர்.

மேலும், அவர்களை சுற்றி ஆடி பாடி கொண்டாடினர். அப்போது, செய்தியாளர் சந்திப்பு நடைபெற்ற இடத்தில் இருந்த மேசை மீது ஏறிய இங்கிலாந்து அணியின் கோல் கீப்பர் மற்றும் வீராங்கனைகள் ஆட்டம் போட்டனர். இந்த நிகழ்வால் அங்கு கூடியிருந்த அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆராவாரமடைந்தனர். செய்தியாளர் சந்திப்பின்போது வீராங்கனைகள் ஆடி பாடி தங்கள் வெற்றி மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய நிகழ்வு இங்கிலாந்து ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

Battle of Blasters சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிய இக்பால் அணி

(ஜிப்ரி எம். ஹிலாம்)

திருகோணமலை யுனைடெட் விளையாட்டுக் கழகம் மற்றும் இக்பால் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் Battle of Blasters (BOB) ஒருநாள் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான போட்டி அண்மையில் இக்பால் மைதானத்தில் நடைபெற்றது. முதல் இரு போட்டிகள் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியை பெற்ற நிலையில், மூன்றாவது போட்டியில் இக்பால் அணியினர் 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்று 2022ஆம் ஆண்டுக்கான சம்பியனாக தெரிவானார்கள்.

50 ஓவர் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யுனைடெட் அணியினர் 31 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் தொளசாத் 25 பந்துகளுக்கு 39 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் முளாசீர், ரோசான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இக்பால் அணியினர் 28 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றனர். துடுப்பாட்டத்தில் பல்லான் 50 பந்துகளுக்கு 87 ஓட்டங்களைப் பெற, யுனைட் அணி சார்பாக அபிரிட் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இக்பால் அணியின் சகலதுறை வீரர் பல்லான் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும், மேலும் இத்தொடரின் சிறப்பாட்டக்காரராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

வெற்றிபெற்ற இக்பால் அணிக்கான சம்பியன் கிண்ணத்தை இக்பால் நகர் ஜும்ஆ மஸ்ஜித் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம் காலம் மற்றும் யுனைடெட் கிங்ஸ் கழகத் தலைவரான கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.பி.எம்.சுஹைல் ஆகியோர் வழங்கினர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

மங்கோலிய ஒலிம்பிக் சம்பியனுக்கு சிறைத்தண்டனை

(மணி)

ஒலிம்பிக் ஜூடோவில் தங்கப்பதக்கம் வென்றவரும் முன்னாள் மங்கோலிய தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் (எம்.என்.ஓ.சி.) தலைவருமான டைகங்கியின் துவ்ஷின்பயாருக்கு கொலை வழக்கில் 16 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உலான்பாதரின் கான்-உல் மாவட்டத்தில் உள்ள ஒரு நீதிமன்றம், தேசத்தை உலுக்கிய ஒரு வருட விசாரணைக்குப் பிறகு பால்ய நண்பனைக் கொன்றதற்காக துவ்ஷின்பயாரை சிறையில் அடைத்தது. 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி மதுபோதையில் சக ஜூடோ வீரரான எர்டெனெபிலெக் எனக்பத்தை, துவ்ஷின்பயர் ஒரு கனமான பொருளால் தாக்கினார், இதனால் மூளைக் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

கொலைக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு துவ்ஷின்பயர் 20 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார். 2008ஆம் ஆண்டு பீஜிங்கில் 100 கிலோவிற்குட்பட்ட ஆண்களுக்கான ஜூடோ தங்கப்பதக்கத்தை 38 வயதாகும் துவ்ஷின்பயர் வென்றார், அதைத் தொடர்ந்து லண்டன் 2012இல் வெள்ளிப்பதக்கம் வென்றார். ஒலிம்பிக்கில் மங்கோலியாவின் முதல் தங்கப்பதக்கம் இதுவாகும்.

மகளிர் எல்லே தொடரில் செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியன்

(செங்கலடி நிருபர்)

2022ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விழாவின் முன்னோடியாக நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு விழாவில் மகளிர் எல்லே தொடரில் ஏறாவூர்ப்பற்று சார்பாக பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது

மட்டக்களப்பு மாவட்ட மகளிருக்கான எல்லே தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு வெபர் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இறுதிப்போட்டி ஏறாவூர்ப்பற்று (செங்கலடி) மற்றும் மன்முனை வடக்கு (மட்டக்களப்பு) பிரதேச செயலகப் பிரிவு விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மன்முனை வடக்கு (மட்டக்களப்பு) அணி களத்தடுப்பினை தெரிவுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஏறாவூர்ப்பற்று சார்பில் பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் வழங்கப்பட்ட 30 பந்துகளில் ஐந்து ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்முனை வடக்கு (மட்டக்களப்பு) அணி நான்கு ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதனடிப்படையில் ஏறாவூர்ப்பற்று சார்பில் பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் ஒரு ஓட்டத்தினால் வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7